விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 22 புதன்கிழமை (05.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 137

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

# புலிகளின் புதிய பிரிவு உள்ளதால் அவசரகாலச் சட்டம் அமுலிலிருக்கும்

## பிரதமர் உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பில் புதிய இராணுவப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. புலிகளின் இந்த நடவடிக்கை காரணமாக அவசரகாலச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் எனப் பிரதமர் டி.எம். ஜயரட்ண தெரிவித்தார். அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## அநாமதேயக் கடிதத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது சட்டவிரோதம்

### அமைச்சர் டக்ளஸ் பி.பி.சிக்குப் பேட்டி

(லண்டன்)

அநாமதேயக் கடிதத்தின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுப்பது சட்டத்திற்கு விரோதமானது என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நீதவானின் வாசஸ்தலத்திற்கு அருகில் ஆயுதங்களுடன் நடமாடினார் என்ற சந்தேகத்தின் பேரில் ஈ.பி.டி.பியின் சாவகச்சேரிப் பிரதேச அமைப்பாளர் சாள்ஸ் கைது செய்யப்பட்டமை தொடர்பாக லண்டன் பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் (18 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றிலிருந்து பாண் 38 ரூபாய்


(யாழ்ப்பாணம்)

மாவின் விலை மூன்று ரூபாயினால் அதிகரித்துள்ளதால் பாண், பணிஸ் ஆகியவற்றின் விலைகளில் இன்றிலிருந்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட விலைகளை விட அதிகரித்து விற்பனை செய்வது, குறித்த நிறைகளில் குறைவு செய்வது அல்லது விலைப்பட்டியல் இன்றி விற்பனை செய்வது தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் இவற்றை மீறுவர்கள் மீது பாவனை அதிகார சபை அதிகாரிகளினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் (18 ஆம் பக்கம் பார்க்க)

## நாங்கள் நாங்களாகவே நின்று தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

### கன்னி உரையில் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்கள் மீதான பேரழிவுகளின் பின்னால் இலங்கை அரசுக்கு உலக வல்லரசுகளும் பிராந்திய வல்லரசுகளும் பெரும் பங்களிப்பை வழங்கின.

ஆனால் இப்போரில் எம்மீது போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதாகவும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகவும் குற்றம் சுமத்தி சிங்கள தேசத்தின் கழுத்தை நெரிக்க வல்லரசுகள் தங்கள் கரங்களை நீட்டுகின்றன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் நிகழ்த்திய கன்னி உரையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் (18 ஆம் பக்கம் பார்க்க)

## உறுப்பினர்களைப் படமெடுத்ததால் நாடாளுமன்றத்துக்குள் நேற்று அமளி

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் ஊடகவியலாளர் பார்வை மண்டபத்தில் இருந்த ஒருவர் உறுப்பினர்களைப் புகைப்படம் எடுத்ததால் அதற்கு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் கடும் எதிர்ப்பினை வெளியிட்டனர்.

புகைப்படம் எடுக்க எவருக்கும் அனுமதி வழங்கப்படாத நிலையில் புகைப்படம் எடுத்தவர் குறித்துத் தேடிப் பார்க்குமாறு ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி முதலில் தனது எதிர்ப்பினை வெளியிட்டார்.

இந் நிலையில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் புகைப்படம் எடுப்பதாகத் தனக்குத் தகவல் கிடைத்துள்ளதாக ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி (18 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க சரத்துக்கு அனுமதி

(கொழும்பு)

இராணுவ விசாரணைக்குச் செல்லாமல் ஜெனரல் சரத் பொன்சேகா நாடாளுமன்ற அமர்வுகளில் தொடர்ந்து கலந்து கொள்வதற்கு சபாநாயகர் அனுமதி வழங்கியுள்ளார்.

இத் தகவலை ஜனநாயக தேசிய முன்னணியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. நாடாளுமன்ற அமர்வுகளில் தான் பங்கேற்கவிருக்கும் நேரத்தில் விசாரணைக்கு என அழைக்கப்பட்டிருப்பது தொடர்பில் சபாநாயகரிடம் ஜெனரல் சரத் பொன்சேகா முறையிட்டதையடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

7-வது நாடாளுமன்றத்தின் 2-வது அமர்வுகள் நேற்றுக் காலை ஆரம்பமாகின. அதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தன்னைப் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் விசாரணைக்கென அழைத்திருப்பதாகவும் இது நாடாளுமன்ற உறுப்பினரின் (18 ஆம் பக்கம் பார்க்க)

## அவசர காலச் சட்டத்தில் சில சரத்துக்கள் தளர்வு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் தளர்வு மேற்கொள்ளப்பட்டுள்ள அவசர காலச் சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பில் நேற்று நாடாளுமன்றத்தில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்த விளக்கத்தை வழங்கினார். அவசர காலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய அவர், அவசர காலச் சட்டத்தின் கீழ்வரும் ஒழுங்கு விதியில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பயங்கரவாதத்திற்கு உதவியளிக்கும் வகையிலான படங்கள், வரைபடங்கள், பயன்படுத்தப்படல் ஆகிய ஒழுங்கு விதியும் நீக்கப் (18 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள 29 கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியமர்வதற்கு அனுமதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகள் சிலவற்றில் மீள்குடியமர்வதற்கு இராணுவத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தெல்லிப்பழை, வடமராட்சி கிழக்கு, நல்லூர் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள 29 கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே மீள்குடியேற்றம் இடம்பெறவுள்ளது.

மீள்குடியேற்றம் தொடர்பாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

கடந்த 2 ஆம் திகதி யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் தெல்லிப்பழை, வடமராட்சி கிழக்கு, நல்லூர், தென்மராட்சி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் பின்வரும் கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியேற்றம் செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவு**

(ஜே/221)-இளவாலை வடக்கு, (ஜே/222)- இளவாலை வட (18 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரதேச செயலர், கிராம அலுவலர் பிரிவுகளின் எல்லைகளை மாற்றம் செய்யத் தீர்மானம்

## எல்லை நிர்ணயக் குழுவும் நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளின் எல்லைகளை மாற்றம் செய்வதற்கு அரசாங்க நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக எல்லை நிர்ணயக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் உட்பட அமைச்சுக்கள் சிலவற்றின் செயலாளர்கள், ஆலோசகர்கள் என 14 பேர் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இது விடயம் சம்பந்தமாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் வெளியிட்ட ஊடக அறிக்கை வருமாறு,

பிரதேச செயலர் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு எல்லைகளை மாற்றம் செய்தல் சம்பந்தமாக அரசாங்க நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 01.04.2010 திகதிய கடிதத்தின் பிரகாரம் அமைச்சரவை தீர்மானத்திற்கமைவாக எல்லை நிர்ணயக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் அங்கத்தவர்களாக பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஸ்.பி.திஸாநாயக்க (தலைவர்) – (ஆலோசகர், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம்), யூ.பீ.ஜெயசிங்க (குழு உறுப்பினர்) – (முன்னாள் செயலாளர் / ஆலோசகர், விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சு), திருமதி வீ.ஜெகராசசிங்கம் (குழு உறுப்பினர்) – (செயலாளர், சமூக சேவைகள் மற்றும் சமூக நலன் புரிஅமைச்சு),

சுகதகே கம்லத் (குழு உறுப்பினர்) – (செயலாளர் நீதிமன்றம் மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சு), எச்.பி.கஷியன் ஹேரத் (குழு உறுப்பினர்) – (செயலாளர் உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சு), ஈ.எம். குணசேகர (குழு உறுப்பினர்) – (பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயக திணைக்களம்), எஸ்.எம்.டபிள்யூ.பெர்ணான்டோ (குழு உறுப்பினர்) – (நில அளவையாளர் திணைக்களம்), திருமதி டி.பி.பி.காஞ்சனா வித்தியாரத்ன (குழு உறுப்பினர்) – (பணிப்பாளர் நாயகம், குடிசன மதிப்பீடு மற்றும் தொகை மதிப்பீட்டு திணைக்களம்),

ஏ.எம்.நஹியா (குழு உறுப்பினர்) – (பணிப்பாளர் நாயகம், புனருத்தாபன அதிகாரி / ஆலோசகர், நீர்வள மற்றும் நீர் வழங்கல் அமைச்சு), க.கணேஷ் (குழு உறுப்பினர்) – (மாவட்டச் செயலாளர் யாழ்ப்பாணம்), பி.கருணாரத்ன (குழு உறுப்பினர்) – (உள்நாட்டலுவல்கள் அமைச்சின் முன்னாள் செயலாளர்/ ஆலோசகர், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு),

எஸ்.பி.எஸ்.சேனாதிர (குழு உறுப்பினர்) – (பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் முன்னைய மேலதிக செயலாளர்/ மேலதிக அரச அச்சக பதிவாளர் அதிபதி, திருமதி ஜந்தா சீ.புதுமுல்ல (குழு உறுப்பினர்) – (முன்னாள் மாவட்ட செயலாளர், குருநாகல்/ சிரேஷ்ட ஆலோசகர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம்), திருமதி எஸ்.கே.வீரதுங்க (செயலாளர்) – (மேலதிக செயலாளர் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு).

இந்தக் குழு சம்பந்தப்பட்ட மாவட்ட அரசாங்க அதிபர்களின் ஆலோசனையைக் கோரியுள்ளது. இதுவிடயமாக யாழ்.மாவட்ட செயலகத்தில் 23.04.2010 அன்று சகல பிரதேசசெயலர்கள் உதவி அரசாங்க அதிபர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கிராம அலுவலர் பிரிவு எல்லைகள் பலவற்றில் திட்டவட்டமான தெளிவான எல்லைகள் இல்லாத காரணத்தினால் இயன்றளவு தெளிவாக அடையாளம் காணக்கூடிய பொதுப்பாதைகளை எல்லையாக நிர்ணயிக்கும் படியும் இவ்வாறான முடிவுகள் எடுக்கப்படும்போது மாவட்டத்தில் வதிகின்ற பொதுமக்கள், பொது நிறுவனங்களிடம் இருந்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தல் வ்ழங்கப்பட்டுள்ளது.

இது விடயமான மேலதிக விபரங்களை பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணி மனைகளில் பெற்றுக்கொள்ள இயலும் என பொது மக்கள் அறிவிக்கப்படுகின்றார்கள்.

கிராம அலுவலர் பிரிவு எல்லைகளில் மாற்றங்களை செய்ய முடியும் எனவும் எனினும் அப்பிரிவுகளின் எண்ணிக்கை அதிகரிக்க இயலாது எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

எல்லைகள் மாற்றம் சம்பந்தமாக கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயங்கள் பின்வருமாறு,

1. பிரதேசத்தின் வரைபடம் தயாரித்தல்
2. அழைக்கப்படவேண்டிய பிரிவின் பெயர்
3. திருத்தியமைக்கப்படவேண்டிய, உருவாக் கப்படவேண்டியமைக்கான தகுந்த காரணங்கள்,
4. பிரிவினுள் உள்ளடங்குகின்ற காணியின் விஸ்தீரணம்,
5. சனத்தொகை (சமயம், இனம் ரீதியாக),
6. பிரதேசத்தில் வதிகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை.

யாழ். மாவட்டத்தில் தற்போது உள்ள பிரதேச பிரிவுகள் தவிர மேலதிகமாக கோப்பாய், சாவகச்சேரி பிரதேசங்களை இரண்டாகப் பிரிப் பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இச் செயலகங்கள் கோப்பாய், அச்சுவேலி, சாவகச்சேரி, கொடிகாமம் என்ற பெயர்களில் அழைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இது விடயமாக கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பதாக ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளமையும் கவனிக்க வேண்டிய விடயமாகும் என்றுள்ளது. (ச)

## நீதவான் அச்சுறுத்தப்பட்ட சம்பவம்; மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதவான் அச்சுறுத்தப்பட்ட சம்பவத்தை யாழ்ப்பாண மாவட்ட மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் கண்டித்துள்ளது.

அண்மைக்காலத்தில் நீதித்துறையில் கடமையாற்றும் நீதிவானை அச்சுறுத்தும் செயற்பாடுகள் நீதிநிர்வாகத்தை சீர்குலைத்து பாரிய அமைதியின்மைக்கு வழிவகுக்கும்.

இத்தகைய செயல்கள் ஜனநாயகப் பண்பாட்டிற்கும் நீதி நிர்வாகத்திற்கும் குந்தகம் விளைவிக்குமாதலால், இச்செயல்களைக் கண்டித்து சுமுகமாக வளர்ந்து வரும் அமைதிச் சூழலை பேணிப்பாதுகாக்க நீதிபதிகளை நிந்திக்கும் அச்சுறுத்தும் செயல்களை கைவிட்டு அமைதி பேண உதவுமாறு எமது சங்கம் வேண்டிக்கொள்கின்றது.

இச்செயலை கண்டித்து எமது சங்கமும் பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றது என யாழ். மாவட்ட மேல் நீதிமன்ற சட்டத்தரணிசங்கம் தெரிவித்தது. (ஏ)

## சுவாசத் தொற்று நோய்கள் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து வருகைதரும் குழந்தை வைத்திய நிபுணர்களால் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் எதிர்வரும் 28ஆம் திகதி 9.00 மணி தொடக்கம் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

இப் பயிற்சிப்பட்டறையில் 50 பேர் பங்குபற்றலாம். இதில் பங்குபற்ற விரும்பும் பொது வைத்தியர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் பெயர்களை எமது பணிமனையில் பதிவு செய்து அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)


## காணி தேவை

யாழ். நகரை அண்மித்த நாவலர் வீதியில் ஆனைப்பந்தி சந்திக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் அல்லது கே.கே.எஸ். வீதி அல்லது மணிக்கூட்டு வீதியில் 2 பரப்பு காணி தேவை. அல்லது களஞ்சிய வசதியுடன் கூடிய கடை தேவை.

தொடர்புகளுக்கு: 0775292554

(சி–195)


## அவசரகாலச் சட்டத்திற்கு என்னை விடவும் வயது அதிகம்

### நாமல் தெரிவிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்திற்கு தன்னை விடவும் வயது அதிகம் என அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட புதல்வருமான நாமல் ராஜபக்ஷ தனது கன்னி உரையில் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் அவசரகாலச்சட்டத்தை நீக்குவது என்பது சாம்பலுக்குள் இருக்கும் தணலைப்போன்று அபாயகரமானது.

எனவே அவசரகாலச்சட்டத்தை நீக்குவது தொடர்பில் மிகவும் நிதானமான முறையில்அவதானமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பயங்கரவாதத்தின் ஆணிவேரை கண்டறிவதற்கு ஆணைக் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இரண்டு இளைஞர் புரட்சிகளினால் அதிகமாக இளைஞர்களே பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ஷவின் கன்னி உரைக்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராட்டு வெளியிட்டிருந்தமை விசேட அம்சமாகும். (ச–5)


## யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

### பாண், பணிஸ் வகைகளின் புதிய விலைகள்

05.05.2010 இன்று (புதன்கிழமை) தொடக்கம் பாண், பணிஸ் வகைகளுக்குப் புதிய விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன

| விபரம் | புதிய விலைகள் |
|---|---|
| 01 றாத்தல் பாண் (450 கிராம்) | 38.00 |
| 01 சோடி கிறீம் பணிஸ் | 23.00 |
| 01 சோடி ரீ பணிஸ் | 20.00 |
| 01 சங்கிலி பணிஸ் | 20.00 |
| 01 கொம்பு பணிஸ் | 12.00 |
| 01 அடைக்கேக் | 18.00 |

என்பதை விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

–செயலாளர்.

(சி–197)


## தப்பி ஓடிய கைதி மடக்கிப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

சிகிச்சைபெறுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்ட சிறைக்கைதி ஒருவர் தப்பியோடியபோது மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, நோய் வாய்ப்பட்ட ஆறு கைதிகள் நேற்றுக்காலை சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அழைத்துவரப்பட்டனர்.

வைத்தியரிடம் செல்வதற்காக கைதி ஒரு வரின் கைவிலங்கு பூட்டு அவிழ்த்துவிடப்பட்டு நோயாளர் வரிசையில் நிற்கவைக்கப் பட்டார்.

அவ்விடத்தில் நின்ற கைதி தனது செருப்பை கழற்றி வைத்துவிட்டு வைத்தியசாலை முன் கதவினூடாக மத்திய பேருந்து நிலையம் நோக்கி தப்பி ஓடிய போது கைதி அவ் விடத்தில் நின்ற பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டார். (ச–30)


## மரண அறிவித்தல்

### செல்வன் மகாலிங்கம் சதீஷன்



பருத்தித்துறை தும்பளை தம்புருவளைப் பிள்ளையார் கோயில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் மகாலிங்கம் சதீஷன் 02.05.2010 (ஞாயிற்றுக்கிழமை) அகால மரணமானார்.

அன்னார் மகாலிங்கம் மனோரஞ்சிதமலர் (பெண் பரிசாரகர் அரசினர் வைத்தியசாலை முழங்காவில்) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் மகேந்திரேஸ்வரி அவர்களின் அன்புப் பேரனும், குணரஞ்சிதமலர் அவர்களின் பாசமிகு பெறாமகனும் நிலோஜினி (லண்டன்), நிரஞ்சன் (டோகா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், முத்துராஜா (ஜெர்மனி, பருத்தித்துறை முத்துராஜா புரடக்சன்ஸ் சீன்ஸ்-மேடை உரிமையாளர்), நித்தியராஜ் (ஜெர்மனி), விமலராசா, சுசிலா (ஜெர்மனி) ஆகியோரின் அன்பு மருமகனும், ஜயந்தன் (லண்டன்), சங்கீதா, பிரியங்கா (ஜெர்மனி) ஆகியோரது மைத்துனரும், வர்ஷனின் பெரியப்பாவும், யுவனின் (லண்டன்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 05.05.2010 (புதன்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்புருவளை
பிள்ளையார் கோவில் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை

தகவல்,
ந.விமலராசா (மாமனார்)

(சி–196)

# இன்று ஒரு தகவல்

## உருவமும் உள்ளமும்

ஒரு முனிவர் காட்டில் தவம் செய்து கொண்டிருந்தார். பல நாட்களாக அப்படியே இருந்து விட்டார்.

ஒரு நாள் அவருக்குச் சக்தி வந்து விட்டது. அதன் பின் இலேசாகக் கண்ணை முழித்துப் பார்த்தார்.

கண்ணுக்கு முன்னால் ஒரு எலி பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது.

"இந்த எலி ஏன் இப்படி நடுங்குகிறது? "என்று யோசித்தார். உடனே அதற்கான காரணத்தையும் கண்டு பிடித்து விட்டார்.

அவருக்குப் பின்னால் ஒரு பூனை நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்துத்தான் எலி நடுங்கியது.

உடனே அந்த எலிக்கு உதவி செய்ய நினைத்தார். தன்னுடைய தவவலிமையை உபயோகப்படுத்தினார்.

அந்த எலியை ஒரு பூனையாக மாற்றிவிட்டார். இனிமேல் அந்த எலி பூனைக்காகப் பயப்பட வேண்டியதில்லை. அது தான் அவரு டைய எண்ணம்.

இப்படிச் செய்து விட்டு அந்த முனிவர் கண்ணை மூடிக் கொண்டார். மறு நாட்காலையில் இலோசாகக் கண்ணைத் திறந்து பார்த்தார்.

நேற்று ஒரு எலியைப் பூனையாக மாற்றினார் அல்லவா அந்தப் பூனை பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது.

இப்பொழுது அது ஏன் நடுங்குகிறது என்று பார்த்தார். பின்னால் ஒரு நாய் நின்று கொண்டிருந்தது.

"அதைப் பார்த்து விட்டுத்தானே இது நடுங்குகிறது. இப்பொழுது இதையும் ஒரு நாயாக மாற்றிவிட்டால் பிரச்சினை தீர்ந்து விடுமே" என்று நினைத்தார். அதே மாதிரி செய்தார்.

மறுபடியும் மறுநாள் கண்ணைத் திறந்து பார்த்தார். இப்பொழுது அந்த நாயும் நடுங்கிக் கொண்டிருந்தது. அதற்குக் காரணம் முனிவருக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த நரி.

"சரி, நம்மிடம் தான் தவவலிமை இருக்கிறதே, இந்த நாயையும் நரியாக்கிப் பார்த்து விடுவோம் என்று நினைத்தார். அதே மாதிரி ஆக்கினார்.

நாயாக இருந்தது நரியாக மாறிவிட்டதால் இனியாவது அது நிம்மதியாக இருக்கும் என்று நினைத்தார். அந்த நம்பிக்கையும் நீடிக்கவில்லை.

நரியும் நடுங்க ஆரம்பித்தது. என்னவென்று பார்த்தால் பின்னால் ஒரு புலி நின்று கொண்டிருந்தது.

முனிவர் சளைக்கவில்லை. நரியைப் புலியாக்கினார். இப்பொழுது அவருடைய மனதுக்குள் ஒரு நிம்மதி.

"அப்பாடா! புலியைப் பயமுறுத்துமளவிற்கு இன்னொரு மிருகம் வரப் போவதில்லை. அதனால் பிரச்சினை இத்தோடு தீர்ந்து விடும்." என்று நினைத்து நிம்மதியாகக் கண்ணை மூடினார்.

மறுநாட்காலையில் வழக்கம்போல் இலேசாகக் கண்ணை முழித்துப்பார்த்தார். புலி நடுங்கிக் கொண்டிருந்தது.

முனிவருக்குக் கோபம் வந்து விட்டது. இருந்தாலும் புலியே பார்த்து நடுங்கக் கூடிய அளவுக்கு அப்படி பயங்கரமான மிருகம் என்னவாக இருக்கும் என்று தெரிந்து கொள்ள நினைத்தார். சிங்கமாக இருக்குமா? யானையாக இருக்குமா? பின்னால் திரும்பிப்பார்த்தார்.

அங்கே ஒரு பூனை நின்று கொண்டிருந்தது. ஒரு பூனையைப் பார்த்து விட்டு எலி பயப்படலாம். புலி பயப்படலாமா? இது ஏன் இப்படிப் பயப்படுகிறது. இப்பொழுது தான் முனிவருக்கு ஒரு உண்மை புரிந்தது.

ஆரம்பத்தில் எலியாக இருந்தது படிப்படியாக மாறி இப்பொழுது புலியாக இருக்கிறது.

அது உண்மைதான். இருந்தாலும் உருவம் தான் மாறிக் கொண்டு வந்திருக்கிறதே தவிர உள்ளம் அப்படியே தான் இருக்கிறது.

உருவத்தில் தான் அது புலி! உள்ளத்தில் அது இன்னும் எலி தான். அதனால் தான் எதிரில் பூனையைப் பார்த்ததும் எலிக்கே உரிய பயம் வந்துவிட்டது.

முனிவர் இதைப் புரிந்து கொண்டவுடன் அந்தப் புலியை மறுபடியும் எலியாக மாற்றினார். பூனையிடம் சிக்காமல் பத்திரமாக அதைக்காப்பாற்றி அனுப்பி வைத்தார்.

நம்ம ஆள் ஒருத்தர் மனைவிக்குப் பயந்து கொண்டு சொல்லாமல் கொள்ளாமல் காட்டுக்கு ஓடிப்போய்விட்டார்.

சும்மா ஓடினால் கண்டு பிடித்து விடுவார்கள் என்று கரடி வேஷம் போட்டுக் கொண்டு போய் ஒரு தனிமை இடத்தில் உட்கார்ந்தார். அங்கே கிடைக்கும் காய் கனிகளை சாப்பிட்டே காலம் தள்ளினார். தவம் செய்தார்.

தவவலிமை கிடைத்த பின்னர் தான் வீட்டுக்குத் திரும்ப வேண்டும் என்பது அவருடைய முடிவு.

ஒரு நாள் காலையில் இலேசாக கண்ணை முழித்துப் பார்த்தார். எதிரில் நிஜமாகவே ஒரு கரடி வந்து உட்காந்திருந்தது. இவர் பயந்து நடுங்கி போனார். இவர் நடுங்க ஆரம்பித்தவுடன் அந்தக் கரடி பேசியது:

"பயப்படாதே மாமா. நான் கரடி இல்லை. உன்னுடைய மச்சான். அக்காதான் இந்த வேஷம் போட்டு என்னை இங்கே அனுப்பி வைத்தது. உன்னைக் கண்டுபிடித்து கூட்டிக் கொண்டு வருவதற்காக. வேஷத்தைக் கலைத்துவிட்டு வீட்டுக்குப் புறப்படு" என்றான்.

*தென்கச்சி . கோ . சுவாமிநாதன்*

# தேசிய தொழில் பயலுனர் திட்டத்தின் கீழ் முழுநேர பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

மொறட்டுவையில் அமைந்துள்ள இலங்கை – ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவகம் தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேர பயிற்சி நெறிக்கு தகைமைகளையுடைய ஆண், பெண் இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ் மொழி (போதனாமொழி) கணிதம் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது மின்சாரவியல் / இலத்திரனியல், இயந்திரவியல் ஆகிய துறைகளில் புதிய கண்டு பிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினை பெற்ற சான்றிதழுடன் க. பொ. த(சா/த) பரீட்சையில் தமிழ் மொழி (போதனாமொழி), கணிதம் உட்பட 6 பாடங்களில் இரண்டு அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

மேலும் மொரட்டுவை பயிலுனர் பயிற்சி நிறுவகம் , தன்னியக்க பொறி யியல் பயிற்சி நிறுவகம் ஊறு கொடவத்தை, இலங்கை ஜேர்மன் புகையிரத பயிற்சி நிறுவகம் இரத்மலானை ஆகிய நிறுவ்கங்களில் முழுநேர பயிற்சியில் ஏற்கனவே இணைந்திருப்போர் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியாது எனவும் குறிப்பிடப்படுகிறது.

விண்ணப்பதாரிகள் 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

அனுமதிப்பரீட்சை தமிழ்மொ ழியில் மாத்திரமே நடைபெறும் என்பதுடன் பயிற்சி போதனைகள் சிங்களத்தில் எல்லா பாடநெறிகளுக்கும், தமிழில் மோட்டார் இயந்திரவியல் பாடநெறிக்கு மட்டும் நடத்தப்படும்.

மேலும் எழுத்து மூலப் பரீட்சை கணிதம், அடிப்படைத் தொழில் நுட்ப அறிவு, பொது அறிவு , ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் எனவும் பரீட்சைகள் கொழும்பு , கண்டி , காலி , பதுளை , அனுராதபுரம் , யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பயிற்சி நெறியில் மோட்டார் இயந்திரவியல் , மில்றைற் வார்ப்பியல், காற்று பதன மாக்கல் / குளிரூட்டல் , வலுமின் சாரவியல் ஆயுத இயந்திரவியல் வாகன மின்சாரவியல், டீசல் இயந்திரவியல் உருக்கியிணைத்தல் , வாகன உடல் திருத்துதலும் வர்ணம் தீட்டுதலும் ஆகிய பாடநெறிகள் போதிக்கப்படவுள்ளது.

விண்ணப்பதாரர்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப 210 X 297 மி.மீ (A4) அளவில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு பிறப்பு அத்தாட்சி பத்திரம், கல்விச் சான்றிதழ், இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ், ( இரண்டு அமர் வுகளில் சித்தியடைந்தவர்கள்) ஆகிய ஆவணங்களின் பிரதிகளுடன் தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் முழு நேர பயிற்சி நெறிக்கு பயிலுனர்களை சேர்த்தல்- 2010 எனக் குறிப்பிட்டு முகாமையாளர், மனித வளமும் நிர்வாகமும், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம், இல.582, காலி வீதி, கல்கிசை என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஜுன் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும் விண்ணப்பப்படிவங்களை www.cgtti.slt.lk எனும் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

# இராசி பலன்

05-05-2010
(சித்திரை 22, புதன்கிழமை)
சப்தமி முன்னிரவு 9.38 மணிவரை
உத்தராடம் முற்பகல் 11.36 மணிவரை
இராகுகாலம் 11.56-1.26 மணிவரை
சுபநேரம் 4.26-5.56 மணிவரை
இனுவில் கிழக்கு அருணகிரிநாத
சுப்பிரமணியர் தேர்.
அமிர்தசித்தம்.

| | |
|---|---|
| மேடம் | தொழில்மேன்மை, காரியசித்தி, தேகநலன் , பாராட்டப்படுதல். |
| இடபம் | திடீர் பயணம், தந்தை வழி உறவு, கட்டுப்பாடு, காரியதாமதம். |
| மிதுனம் | அபகீர்த்தி, எதிர்பாராத நன்மை, பிறருக்கு உதவுதல், போசன சுகம். |
| கடகம் | குடும்ப மகிழ்ச்சி, தொழில் நன்மை, பாராட்டு, விருந்துபசாரம். |
| சிங்கம் | முயற்சி கைகூடும், ஆரோக்கிய நிலை, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| கன்னி | தொழில் சிந்தை, மனஸ்தாபம், காரிய தாமதம், தனவிரயம். |
| துலாம் | நல்ல முயற்சி, மனச்சோர்வு, நண்பர்கள் சந்திப்பு , வாகன சுகம். |
| விருச்சிகம் | சகோதரர் உதவி, காரிய நன்மை, போசன சுகம், தன்னம்பிக்கை. |
| தனுசு | ரோகநிலை, கடின முயற்சி, வீண்பகை, தனவிரயம். |
| மகரம் | நண்பர்கள் சந்திப்பு, நல்ல செய்தி, போசன நன்மை , தேக நலன். |
| கும்பம் | காரியம் அலைச்சல், தேக நலன், சுபசெலவு, மனச்சஞ்சலம். |
| மீனம் | எடுத்த கருமங்கள் கைகூடும், பெருமைப்படுதல் பொருள் சேர்க்கை , கீர்த்தி. |

வளவன்

# தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்குவதற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

Computer Driving License, Computer Hardware Technician துறைகளில் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் (NVQ) வழங்குவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண் ணப்பப்படிவங்களை பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் விண்ணப்பப்படிவத்துடன்,


- தோற்ற விரும்புகின்ற ஒவ்வொருவரும் பரீட்சைக்குரிய பதிவுக்கட்டணமாக 250/- வினை மக்கள் வங்கி கிளையில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு. பணம் செலுத்தவேண்டிய வங்கி- மக்கள் வங்கி நுகேகொட கிளை, பணம் செலுத்த வேண்டிய கணக்கு இல- 174100170347379
- தொழிலில் ஒரு வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளதென தமது பிரிவிற்குரிய கிராம அலுவலரிடம் அல்லது தான் சேவை புரியும் நிறுவனத்தின் அதிகாரியிடமிருந்து பெற்ற சான்றிதழ்.

என்பவற்றை இணைத்து தத்தம் பிரதேச செயலகங்களுக்கு எதிர்வ ரும் 10 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 70 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 80 | 100 | 100 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 70 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 50 |
| பயிற்றங்காய் | 80 | 100 | 70 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 150 |
| போஞ்சி | 150 | 200 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 80 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |





வடக்கு மாகாண நூலக பணியாளர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் பிரதம நூலகர் ச.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை நூலகர் இ.தர்மலிங்கம் மங்கள விளக்கேற்றுவதனையும் பிரமத விருந்தினராக கலந்து கொண்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் உரையாற்றுவதனையும் சங்கத்தின் நிர்வாக சபையினர், பிரமத நூலகர் ச.தனபாசிங்கம் மற்றும் யாழ். கிளிநொச்சி மாவட்டபிரதிநிதிகள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரி நிருபர்)

## புதிய தொழிற்பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் புதிய தொழிற்பயிற்சிகள் கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் அமையவுள்ள தொழில் பயிற்சி அதிகாரசபைக்குரிய கட்டடத்தொகுதியில் ஆரம்பிக்கப்பட வுள்ளது.

இவ்வகையில் நீர்க்குழாய் பொருத்துதல், கணனி வன்பொருள், கணனி மென்பொருள், மரப்பொறியியல் ஆகியவற்றில் தேசிய தொழில் திறன் சான்றிதழுக்கான (NVQ III) ஆறு மாத கால கற்கை நெறிகள் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால் தொழிற்றிறன் பயிற்சிகளை பெற விரும்புவோர் அன்றைய தினம் உரிய ஆவணங்களுடன் மேற்படி விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட இணைப்பாளர் இரா. அகிலன்கேட்டுக்கொண்டுள்ளார். (6)




## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பிள்ளை நேய பாடசாலைகளில் ஆசிரியர்களாக கற்பிக்கும் தெரிவு செய்யப்பட்ட 30 ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 7,8,9 ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் 4.30 மணிவரை வரணி ஆசிரியவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பெயர் குறிப்பிட்டு கடிதம் அனுப்பப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் மட்டும் தவறாது காலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேம காந்தன் அறிவித்துள்ளார். (4-29)

## இலக்கியக் கருத்தரங்கும் கவிஞர் கௌரவிப்பும்

(சாவகச்சேரி)

உலக புத்தக தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினால் இலக்கிய கருத்தரங்கும் கவிஞர் கௌரவிப்பும் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நூலகர் இ.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் கவிஞர்களை கௌரவிக்கவுள்ளார்.

தொடர்ந்து கவிஞர் த.நாகேஸ்வரன் *பெண்ணின் பெருந்தகை யாவுல* என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார். (4-29)

## விண்ணப்பங்கோரல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு கொடிகாமம் பல.நோ.கூட்டுறவுச் சங்கத்திற்கு கணக்காளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் சங்கத்தலைமை காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்று விண்ணப்பிக்கும்படி பொதுமுகாமையாளர் எஸ்.தேவகுமார் தெரிவித்துள்ளார்.(4-29)

## வட்டு இந்துவாலிபர் சங்கத்தால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மற்றும் ஏனைய கல்லூரிகளில் கல்வி கற்கின்ற வறிய மற்றும் இடம் பெயர்ந்த 90 மாண வர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன் பளிப்பாக வழங்கப்பட்டது.

மேற்படி கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டு இந்து வாலிபர் சங்க திருமண மண்டபத்தில் நடைபெற்றது. வட்டு மத்திய கல்லூரியில் கல்வி கற் கின்ற 60 மாணவர்களுக்கு சங்கத்தால் அவர் களது கல்லூரி செலவீனகள் யாவும் பொறுப்பேற்று அவர்களது கற்றல் நடவடிக் கைகள் இடையூறின்றி தொடர்வதற்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

சங்கத்திற்கு வருமானமாக கிடைக்கின்ற நிதியினையும் மற்றும் புலம் பெயர்ந்து வாழுகின்ற வட்டூர் மற்றும் முன்னாள் அங்கத்தவர்களால் அன்பளிப்பாக வழங்கப்படுகின்ற நிதியினையும் கொண்டே இவ் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்படுகின் றது.

கற்றலுக்குரிய வசதிகள் இல்லை என சங்கத்தை நாடி வருகின்ற மாணவர்களுக்கு அவர்களது கற்றல் நடவடிக்கைகள் இடையூறின்றி தொடர்வதற்கான வசதிகள் இலவசமாக செய்து கொடுக்கப்படுவதோடு தற்போது 5 பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவர்களது கல்வி நடவடிக்கைகளுக்கான செலவீனங்களை செய்து வருவதாகவும் ஏற்க னவே பல மாணவர்கள் இச் சங்க கல்வித் திட்டம் மூலம் பயன் பெற்று பல உயர் பதவிகளை வகித்து வருவதாகவும் கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் சங்க கல்வித்திட்டத்தில் கல்விகற்ற பல மாணவர்கள் உயரிய பெறுபேற்றினை பெற்றுள்ளதாகவும் சங்கத் தலைவர் இ.குகன் தெரிவித்தார். (6-27)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் வறுமைக்கோட்டிற்குட்பட்ட பல்கலை.மாணவர்களுக்கு உதவி

(மருதங்கேணி)

யாழ்ப்பாணம், கண்டி பேராதனை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலுள்ள பல்கலைக் கழக மாணவர்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 15 மாணவர்களுக்கு தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவித்தொகை வழங்கப்பட்டுவருகின்றது.

கடந்த வருடம் கார்த்திகை மாதம் தொடக்கம் இத்தொகை வழங்கப்பட்டுவருவதாகவும் 1500 ரூபா தொடக்கம் 3500 ரூபா வரை தகுதிக்கு ஏற்ப வழங்கப்படுவதாகவும் ஆச்சிரம சுவாமி தெரிவித்துள்ளார். (6-4-35)

## கலைவிழாவும் கலைவிழி வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் கலை மாணவர் மன்றம் நடத்தும் கலைவிழாவும் கலைவிழி வெளியீடும் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் பகுதித்தலைவர் ம.மரியதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசிரியுரையை கல்லூரி அதிபர் இ.ஓங்காரமூர்த்தி வழங்கவுள்ளார். பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழக புவியியற்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் பேராசிரியர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கால சாலையின் சிரேஸ்ட விரிவுரையாளர் சரா புவனேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் நூலின் முதற்பிரதியை சயன்ஸ் ஹோல் பணிப்பாளர் இ.அருட்செல்வன் பெற்றுக்கொள்ளவுள்ளதுடன் நூலாய்வுரையை யாழ். பல்கலைக்கழக சமூகவியற்துறை விரிவுரை யாளர் ஆர்.இராஜேஸ்கண்ணன் நிகழ்த்து வார்.

மேலும் விவதாப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், இணுவில் மத்திய கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த பரிசு பெறும் மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறும் 2010 கலைப்பிரிவு மாணவர்களுக்கு பரீட்சை தொடர்பான அவசிய கூட்டம் இன்று காலை நடைபெறவுள்ளதாகவும் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (4)

## அதிஸ்டலாப சீட்டிழுப்பு முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் அபிவிருத்திக்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொண்டு தங்களுக்குரிய பரிசினைப் பெற்றுக்கொள்ளுமாறு வலிமேற்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இலக்கங்கள் வருமாறு,

1 ஆம் பரிசு இல : 1743

2 ஆம் பரிசு இல : 1418

3 ஆம் பரிசு இல : 0299

ஆறுதல் பரிசுகள் இல : 1610, 2855, 3900, 4983, 4241, 4635 ,4929 ,2185, 3902, 1602 . (6-4)

## கட்டடவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

நீண்டகால இடைவெளியின் பின்னர் வேதபாராயண சனசமூக நிலையத்தின் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிலையத்தின் பொருளாளர் இ.சத்தியானந்தன் அறிவித்துள்ளார். (4)

## தேசிய டெங்குக்கட்டுப்பாட்டு வாரம்

நாடு முழுவதிலும் தற்போது பருவகால மழை பெய்து வருவதனால் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு மத்திய சுகாதார அமைச்சினால் நேற்று முதல் 9ஆம் திகதிவரையான வாரத்தினை தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலும் பல பகுதிகளிலும் மழைபெய்து வருவதனால் இங்கும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்கலாம். மேலும் யாழ்.குடாநாட்டிற்கு தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர்.

அதேபோன்று குடாநாட்டில் இருந்தும் தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தென் பகுதிக்கு சென்று வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் டெங்கு நோயின் பரம்பல் யாழ். மாவட்டத்தில் மிக மோசமாக அதிகரிக்கலாம்.

எனவே யாழ். மாவட்டத்திலும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அடுத்த வாரத்தில் தீவிரப்படுத்த வேண்டும். இவ் வாரத்தில் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

1. ஒவ்வொரு பாடசாலையிலும் சிரமதான பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் அழிக்கப்படவேண்டும்.
2. ஒவ்வொரு நிறுவனத்திலும் திணைக்களத்திலும் ஊழியர்களின் பங்களிப்புடன் சிரமதானப்பணி இடம்பெறவேண்டும்.
3. ஒவ்வொரு தனியார் கல்வி நிலையமும் உரிமையாளர்களால் உடனடியாக துப்புரவு செய்யப்படவேண்டும்
4. பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் உடனடியாக கிரமமாக துப்புரவு செய்யப்படவேண்டும்.
5. மத வணக்கத்தலங்கள் சம்பந்தப்பட்ட பரிபாலன சபையினரால் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
6. கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் அபிவிருத்தி சங்கங்கள், சனசமூக நிலையங்கள் தத்தமது கிராம மட்டத்தில் சிரமதானப் பணி மூலம் சுத்திகரிப்புப் பணி மேற்கொள்ளப்படவேண்டும்.
7. உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக்கழிவுகளை கிரமமாக அகற்றி சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.
8. கழிவுநீர் வடிகால்களில் நீர் தேங்காதவாறு தினமும் சுத்திகரிக்கப்பட வேண்டும்.
9. வீதியோரங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் உடனடியாக துப்புரவு செய்யப்பட வேண்டும்.
10. ஒவ்வொரு வீட்டு உரிமையாளரும் குடியிருப்பாளரும் தத்தமது வீட்டு வளாகத்தில் சுத்திகரிப்பு பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் வேண்டும்.

இச் செயற்பாடுகளை அடுத்த ஒரு வார காலத்திற்குள் முன்னெடுத்துடெங்கு நோயை கட்டுப்படுத்த ஒத்துழைக்குமாறு அனைவரையும் வேண்டுகின்றேன்.

**வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்**
**பிராந்தியப் பணிப்பாளர் ,சுகாதார சேவைகள் ,யாழ்ப்பாணம்.**

# உத்தேச கட்டணத்திற்கு மேலாக அறவிடப்படும் தனியார் பஸ்கள் மீது சட்ட நடவடிக்கை

## போக்குவரத்து உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ். குடாநாட்டில் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் தனியார் பஸ்களில் உத்தேச கட்டணத்திற்கு மேலாக அறவிடப்படும் பஸ்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட போக்குவரத்து உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டின் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்ற பஸ்களில் பயணிகளிடம் நிர்ணயிக்கப்பட்ட போக்குவரத்து கட்டணத்திற்கு அதிகமாக பணம் அறிவிடப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - வவுனியாவிற்கான போக்குவரத்திற்கான கட்டணம் 13 ரூபா மாத்திரமே. இதைவிட இவ் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் பஸ்கள் 200 ரூபா அறவிடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பஸ்கள் அனைத்திலும் கட்டணப் பட்டியல்களை பொதுமக்களின் பார்வைக்கு விளம்பரப்படுத்தல் வேண்டும். அத்துடன் பயணத்திற்கான பற்றுச்சீட்டும் பயணிகளின் மிகுதிப்பணமும் கையளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளாத பஸ்கள் மீது பொதுமக்கள் முறைபாடு செய்யும் பட்சத்தில் உனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்துள்ளார். (6-7)

# மக்கள் எதிர்பார்த்த புதிய ஐ.தே.க. இன்று உதயமாகும்

## கயந்த கருணாதிலக

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைப்பது தொடர்பாக கட்சியின் செயற்குழு இன்று கூடவுள்ளது. பெரும்பாலும் மக்கள் எதிர்பார்த்த புதிய ஐக்கிய தேசியக் கட்சியை இன்று எதிர்பார்க்கலாம் என ஐ.தே.கவின் பேச்சாளர் கயந்த கருணாதிலக எம்.பி. தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைக்க வேண்டும் என கருத்துக்கள் அனைத்து தரப்பினராலும் முன் வைக்கப்பட்டன.


இதற்குப் பிரதான காரணம் அண்மையில் இடம்பெற்ற இலங்கையின் எழாவது நாடாளுமன்றத்திற்கான உறுப்பினர் தெரிவின் போது பொது மக்கள் ஐ.தே.மு.வின் புதிய இளைய வேட்பாளர்களைக் கூடுதலாக ஆதரித்திருந்தமையாகும்.

இதற்கு அமைவாக ஐ.தே.கவினை மறுசீரமைக்க கட்சி உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதுடன் இது தொடர்பாக இறுதிக்கட்ட தீர்மானங்களை எடுக்க ஐ.தே.கவின் செயற்குழு உறுப்பினர்கள் இன்று புதன்கிழமை மாலை கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் கூடவுள்ளனர்.

இக் கூட்டத்தில் கட்சியின் சிரேஷ்ட பதவிகளில் மாற்றங்கள் கொண்டு வருவது தொடர்பாகவும் மக்களின் கட்சி மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவது தொடர்பாகவும் கூடிய அவதானம் செலுத்தப்படவுள்ளது.

எவ்வாறாயினும் பொது மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைவாக புதிய பொலிவுடன் ஐக்கிய தேசியக் கட்சி விரைவில் அறிவிக்கப்படும் எனக் கூறினார். (6-4)


## பாராட்டி வாழ்த்துகிறோம்!




யாழ் மாநகரசபையின் முதல்வராக தெரிவு செய்யப்பட்டதன் பின் வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தினால் மாநகரசபைத் தொழிலாளர்களின் நலன்கள் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட நியாய பூர்வமான அனைத்துக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு தொழிலாளர்களின் மத்தியில் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தி மாநகரசபையின் செயற்பாடுகளை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வது குறித்து யாழ். மாநகர சபையின் மாண்புமிகு முதல்வராகிய தங்களின் சேவையையும் காலத்திற்குக் காலம் மாநகரசபை தொழிற்சங்கத்தால் சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வுகண்டு தொழிலாளர் மத்தியில் புத்துணர்வை ஊட்டிவரும் கௌரவ பாரம்பரிய கைத்தொழில்,சிறுகைத்தொழில் அமைச்சர் மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா அவர்களின் சேவையையும் அமோக விருப்பு வாக்குகளினால் இலங்கை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டமையும் வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம் மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் தொடர்ந்து எமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் முதல்வர்,அமைச்சர் ஊடாக சபைக்கு வழங்குவோம் என தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகின்றோம்

தலைவர்,

செயலாளர்,

பொருளாளர், அங்கத்தவர்கள்.

(1318)


# உருத்திரபுரம் ஆற்றிலிருந்து கைக்குழந்தையின் சடலம் மீட்பு

கிளிநொச்சி உருத்திரபுரம் பிரசேத்தில் ஆற்றில் இருந்து கைக் குழந்தையொன்றின் சடலத்தை பொலிசார் கடந்த திங்கட்கிழமை மீட்டுள்ளனர்.

பிறந்த இரண்டு நாட்களான இந்த குழந்தையின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட நீதவான் எஸ்.சிவகுமா ரன் மரண விசாரணைகளை நடத்தியுள்ளார். இதேவேளை குழந்தையின் உறவினர்களை கண்டறிவதற்காக பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (6-4)

# வடக்கு-கிழக்கு பகுதிகளில் வெடிபொருட்கள்,ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிலபகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது வெடிபொருட்கள் மற்றும் ஒரு தொகை ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஓராண்டு கடந்த போதும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ள அதேவேளை ஆயுதங்களும் கைப்பற்றப்படுவதாக படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நொச்சிமோட்டை, ஓமந்தை, கிளிநொச்சி, கொக்காவில் மற்றும் குமுழமுனை ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைளின் போது 37 கிரனேட்டுகள், 81 மி.மீ.மோட்டார் குண்டுகள், 6 மைக்ரோ பிஸ்டல் 1, கவச வாகனத்தைத் துளைக்கும் ரவைகள் 27 மற்றும் ரவைகள், நிலக்கண்ணிவெடிகள் ஆகியனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை கிழக்கு மாகாண வாகரைப் பகுதியில் 55 நிலக்கண்ணிவெடிகள், 57 நிலக்கண்ணிவெடி பியூஸ்கள், 9 கொள்கலன்களில் குண்டுகள், 8 ரி-56 ரக ஆயுதங்கள், 10 ரி-56 ரக மகசின்கள், ஒரு கிளைமோர் மற்றும் 5 கிலோ வெடி மருந்துகள் ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் குழுவினரும் வடபகுதியில் பெருமளவு கண்ணிவெடிகளை அகற்றி வருகின்றனர். அதாவது நொச்சிக்குளம், பெரிய பண்டிவிரிச்சான், நாச்சிக்குடா ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு நிலக்கண்ணி வெடிகள் அகற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (6-4)

# மூன்று வருடங்களில் பொருளாதார அபிவிருத்தியுடனான சமூக மேம்பாடு

## பிரதமர் டி.எம்.ஜயரட்ண நம்பிக்கை

(கொழும்பு)

அடுத்துவரும் மூன்று வருடங்களுக்குள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்பார்க்கும் பொருளாதார அபிவிருத்தியூடானான சமூக மேம்பாட்டை ஏற்படுத்த முடியும் என்று பிரதமரும் புத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டு மக்கள் அனைவரும் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டினதும் மக்களினதும் நலனை கருதி பொருளாதார அபிவிருத்தி சமூக மேம்பாட்டுக்காக ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார்.

கொழும்பு-7 விஜேராமவில் உள்ள புத்தசா சன மற்றும் மத விவகார அமைச்சுக்கு வருகை தந்த பிரதமர் தனக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சு கடமைகளைநேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக பொறுப் பேற்றுக் கொண்டார்.

கடமைகளை பொறுப்பேற்றக் கொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், சமுதாயத்தை மாற்றியமைக்கும் பாரிய பொறுப்பு எமக்குள்ளது.

எமது நாட்டில் வாழும்அதிகமான மக்கள் நல்லவர்களாக இருக்கின்றனர். இருப்பினும் ஒருசிலர் செய்யும் மோசமான செயல்கள் காரணமாக சகலரது பெயரும் கெட்டுப் போகின்றது. நாட்டில் தற்பொழுது பல்வேறு வகையான குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான சட்டங்களின் மூலம் முற்றாக இல்லாமல் செய்ய முடியாது.

ஆனால் மதங்களின் ஊடாக அதனை மாற்றியமைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் மதங்களின் தலைவர்களின் ஒத்துழைப்புடன் எமது நாட்டில் சிறந்ததொரு சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும். இதற்கு சகலரினதும் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானதாகும் என்று குறிப்பிட்டார். (6-4)


Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2010

# பூமியைக் காக்குமா எரிமலை?

**குளிர்மையான ஐஸ்லாந்து இப்போது அதிக வெப்பமாகிவிட்டது. எரிமலை வெடித்துச் சிதறியதில் ஐரோப்பிய தேசங்கள் எல்லாமே அரண்டு கிடக்கின்றன. புகை, சாம்பல் சுழன்றடித்து விமான சேவைகளை பதம் பார்க்க, புவி சூடாவதை ஓரளவு கட்டுப்படுத்த இந்தப் பேரழிவு உதவும் என இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளனர் விஞ்ஞானிகள்!**




வட துருவத்தில் அமைந்துள்ள தீவுகளில் ஒன்று ஐஸ்லாந்து. வெந்நீர் ஊற்றுகளும் எரிமலைகளும் சூழ்ந்த தேசம். 35 எரிமலைகள் இங்கு உள்ளன. உலகின் மிகப்பெரிய 4 எரிமலைகள் இங்குதான் துயில் கொள்கின்றன.

இப்போது வெடித்துச் சிதறிய எரிமலையின் பெயர் *இஜஃப்ஜாலாஜோகுல்* எரிமலை என்றே தெரியாத அளவுக்கு பனியால் மூடப் பட்டமலை இது. *எரிமலை எப்படி பொறுக்கும்* என்ற பாடலுக்கு ஏற்ப ஜில் என பனிமலைக்குள் ஹாயாக உறங்கிக் கொண்டிருந்த எரிமலை மார்ச் மாதம் உறுமத் தொடங்கியது.

லேசாக புகை கக்க ஆரம்பித்து ஏப்ரலில் புயலாகப் புறப்பட்டு கோபத்தைக் கொப்பளித்து விட்டது.

இது ஏற்கனவே பலமுறை வெடித்துச் சிதறிய எரிமலைதான். ***ஐஸ் ஏஜ்*** என்றழைக்கப்படும் காலத்திலிருந்தே வேலை காட்டி வருகிறது. கி.பி.920,1612, 1821 , 1823 ஆண்டுகளில் பனிமலைக்குள் இருந்து இந்த எரிமலை பூதம் பொங்கியெழுந்துள்ளது.

1821இல் எரிமலை வெடித்தபோது 2 ஆண்டுகளுக்கு நெருப்பையும் சாம்பலையும் விடாமல் கக்கியது. அக்காலகட்டத்தில் விமான சேவை கண்டுபிடிப்பு நிலையில் இருந்ததால், பாதிப்பு எதுவுமில்லை.

இப்போதோ, வெடித்துச் சிதறிய எரிமலையால் பல நாடுகளின் விமான நிறுவனங்களுக்கு பலத்த அடி.

ஒரே நாளில் இந்த எரிமலை வெடித்துச் சிதறிவிடவில்லை. 5 மாதங்களாக பூச்சாண்டி காட்டிய எரிமலை ஏப்ரல் 14,15ஆம் திகதிகளில் க்ளைமாக்ஸை எட்டியது. 2009 டிசம்பர்-2010 மார்ச் மாதங்களுக்கு இடையே இந்த எரிமலை அமைந்துள்ள பகுதியில் பலமுறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

அதுவரை அமைதியாகவே இருந்த எரிமலை, மார்சில் திடீரென 320 அடி உயரத்துக்கு லாவா என்ற நெருப்புக் குழம்பை கக்கியது. இது பனிமலைகளுக்கு இடையே நெருப்பு ஆறாக ஓடியது.

ஏப்ரல் முதல் வாரத்தில் என்ன மாயம் நடந்ததோ, ஒன்றும் தெரியாத அப்பாவி போல எரிமலை அமைதியானது.

இருவார அமைதிக்குப் பின் ஏப்ரல் 3ஆம் வாரத்தில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட அடுத்த சில மணி நேரங்களில் நெருப்புக்குழம்பு தலையை நீட்டியது. அந்த வெப்பத்தால் பனிமலை உருகி, ஆறாகப் பெருக்கெடுத்தது. நெருப்புக்குழம்பும் நீரும் சேர்ந்து புகையாகவும் சாம்பலாகவும் 36 ஆயிரம் அடி உயரத்தில் வான் பகுதியை வசப்படுத்தின.

ஐஸ்லாந்து, இங்கிலாந்து, அஜர்லாந்து, பெல்ஜியம், பின்லாந்து, ஜேர்மனி மற்றும் ரஷ்ய வான்வெளியில் கக்கிய சாம்பல் மற்றும் புகையால் விமான நிலையங்கள் தற்காலிக மூடுவிழா கண்டன.

ஏப்ரல் 3ஆம் வாரத்தில் மட்டும் உலகம் முழுவதும் சுமார் 20 ஆயிரம் விமான சேவைகளுக்கு ஓய்வு. சொந்த நாட்டுக்குச் செல்ல முடியாமல் இலட்சக்கணக்கான பயணிகள் பல நாடுகளில் முடங்கினர்.

உலகில் ஒரேசமயத்தில் அதிகளவில் விமான சேவை பாதிக்கப்பட்டது இப்போது தான்!

எரிமலை வெடிப்புக்கும் விமான சேவைக்கும் என்ன தொடர்பு? எரிமலை சாம்பல் வான்வெளியை மறைத்ததால், பாதை தெளிவாகத் தெரியாமல் போனது. இதுவே விமானத்தை இயக்க முடியாமல் போகக் காரணம்.

புகை மற்றும் சாம்பல் இடையே விமானத்தை இயக்கினால்? இன்ஜின் கொம்ப்ரசர் பிளேட்டுகளை சாம்பல் சேதப்படுத்தும். எரி பொருள் குழாய் மற்றும் எயார் எரிபொருள் குழாய் மற்றும் எயர் ஃபில்டர்களை அடைக் கும்.

இன்ஜினுக்குள் சாம்பல் சூடேறி குழம்பாகி, பின்னர் குளிர்ந்து கெட்டியாகிவிடும். பின்னர் குளிர்ந்து கெட்டியாகிவிடும். ரிஸ்க் எடுத்து விமானத்தை இயக்கினால் விபத்து ஏற்படும் என்கின்றனர் லண்டன் விமான நிலைய தரைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள்.

இஜஃப்ஜாலாஜோகுல் எரிமலை விமான நிறுவனங்களுக்கு கசப்பு அனுபவத்தைக் கொடுக்க, விஞ்ஞானிகளுக்கோ புதிய உற்சாகம். புவி சூடாகும் பிரச்சினை விஸ்வ ரூபம் எடுத்துவருவம் வேளையில் வான் வெளியில் மேகத்தை மறைந்துள்ள புகை.மற்றும் சாம்பலால் புவி சூடாவது கொஞ்சம் கட்டுப்படும் என்று கணித்துள்ளனர் அமெரிக்க விஞ்ஞானிகள்.

இது எப்படி சாத்தியம்? எரிமலையில் இருந்து வெளிவருவது வெறும் சாம்பல் மட்டுமல்ல முழுக்க முழுக்க கந்தகடை ஒக்ஸைட்டும் சேர்ந்தே வந்துள்ளது. இது மேகக்கூட்டத்திலுள்ள தண்ணீருடன் வினை புரிந்து கந்தக அமிலமாக மாறும். மேகக் கூட்டங்களுக்கு மேலே இது திவலைகளாக மிதக்கும் போது சூரியனிடமிருந்து வரும் அபாயமான கதிர்களை எதிரொளிப்பு முறையில் தடுக்கும்.

புவி சூடாவதைத் தடுக்கும் சக்தி இத்திவலைகளுக்கு உண்டு என்று கூறும் அமெரிக்க விஞ்ஞானிகள் இதற்கு பிலிப் பைன்ஸ் பினாடுபோ எரிமலை வெடிப்புச் சம்பவத்தை உதாரணமாகக் கூறுகின்றனர்.

1991 இல் இந்த எரிமலை வெடித்த போது 17 மில்லியன் தொன் கந்தகடை ஒக்ஸைட் சாம்பல்.வெளியேறியது. இதனால் பூமியின் வடதிசையில் 0.5 முதல் 0.6 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை குறைந்தது.

இப்போது வெடித்துச் சிதறிய ஐஸ்லாந்து எரிமலை சாம்பல் இன்னும் சிறிய நாட்களுக்கு வெளியேறி வான் வழியை ஆக்கிரமித்தால் பூமியின் வெப்பநிலை கணிசமாகக் குறையும் என்று உறுதி கூறுகின்றனர் ஒரு நல்லது என்பது இதுதானே?

## உலகைச் சுற்றி

AROUND THE WORLD


ஆர்.யூ.பாலமுருகன்


# 'ஷாக்' அடிக்கும் மைதானம்!


சுற்றுச்சூழலுக்கு ஆபத்தில்லாத மின்சார உற்பத் திக்கு எல்லா நாடுகளிலுமே சிவப்புக்கம்பள வரவேற்பு தான். தாய்வானையும் அது விட்டுவைக்கவில்லை. அங்கு கடந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தை தற்போது சூரிய சக்தி மைதானமாகவே மாற்றிவிட்டது அந்நாட்டு அரசு.

இந்த மைதானத்தை வடிவமைத்தவர் ஜப்பானைச் சேர்ந்த கட்டிட வடிவமைப்பாளர் டோயோ இடோ. மைதானத்தின் மேற்கூரையில் இதுவரை இல்லாத அளவுக்கு 8844 சொலார் தகடுகளைப் பதித்து அசத்தியுள்ளார்இவர். இதன்மூலம் கிடைக்கும் மின்சாரத்தால் தினமும் 3300 அரங்க விளக்குகள், இரவு நேர ஒளி வெள்ள விளக்குகள் மற்றும் இரண்டு மெகா சைஸ் டி.வி.களை இயக்க முடியும். மைதானத்தை பயன்படுத்தாத நாட்களில் கிடைக்கும் மின் சாரத்தை நிறுவனங்களுக்கு விற்று பணம் சம்பாதிக்கவும் உள்ளது அந் நாட்டு அரசு.

இந்த மைதானத்தில் ஓராண்டுக்கு 11.4 இலட்சம் கிலோ வாற் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். இதனால் 660 தொன் கார்பன்டைஒக்ஸைட் நச்சு வாயுவைக் கட்டுப்படுத்த முடியும் என்பது சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு இனிப்பான செய்தி. அதுமட்டுமா? உலகின் ஒரே குதிரை லாட வடிவ மைதானம் இதுவே!







## குமுறலும் சாம்பலும்

*ஐஸ்லாந்து எரிமலை எப்படி குமுறி வெடித்தது? முதலில் எரிமலையின் அடியில் அதிகபட்ச கொதிநிலை ஏற்பட்டு நெருப்புக் குழம்பு மேல்நோக்கி எழுந்தது. அடியில் அழுத்தம் அதிகக்க அதிகரிக்க தரையின் கீழ்ப்பகுதி உப்பியது.*

*எரிமலையில் விரிசல்கள் ஏற்பட்டு நெருப்புக்குழம்பு வெளியேறிய போது அழுத்தம் அதிகமாகி, எரிமலை வெடித்துச் சிதறியது. ஐஸ்லாந்து குளிர் பிரதேசமாக இருப்பதால் எரிமலையைச் சுற்றி பனி படர்ந்தது. நெருப்புக் குழம்பு நீராவியுடன் சேர்ந்தவுடன் நெருப்பு அணைந்து புகை, சாம்பல் சூழ்ந்தது.*

## பகிடிவதைச்சம்பவங்கள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை முதலாம் நிலையில்

### பிரதம நீதியரசர் தெரிவிப்பு



(கொழும்பு)

பகிடிவதைச் சம்பவங்கள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை முதலாம் நிலை வகிப்பதாக பிரமத நீதியரசர் அசோகடி சில்வா தெரிவித்துள்ளார்.

பகிடிவதைச் சம்பவங்கள் ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்போது இலங்கையில் மிகவும் மோசமான நிலைமை காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழகங்களில் மட்டுமன்றி ஏனைய கல்வி நிறுவனங்களிலும் பகிடி வதை வியாபித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர் அமைப்புக்களை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையினால் ஒழுக்கத்தை பேணிப் பாதுகாப்பதில் சிக்கல் நிலைமை உருவாகியுள்ளதெனவும் பகிடிவதையை தடுக்கும் வகையில் புதிய சட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பகிடிவதைச் சம்பவங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

கடுமையான முறையில் பகிடி வதையில் ஈடுபடுவோருக்கு எதிராக 10 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-4)

## வாக்கெடுப்பு நடத்தப்படாமல் பதவியொன்றை ஏற்றுக்கொள்ள தயாரில்லை -சஜித்பிரேமதாஸ



(கொழும்பு)

வாக்கெடுப்பு நடத்தப்படமால் பதவியொன்றை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என அம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பு நடத்தப்படமால் ஒவ்வொருவர் வழங்கும் பதவியை ஏற்றுக்கொள்ளும் திட்டம் தமக்குக் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயக அடிப்படையில் கட்சி உறுப்பினர்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து கொண்டதன் பின்னர் தாம் பதவியைப் பொறுப்பேற்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.


ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை தொடர்பில் அண்மைக் காலமாக வெளியிடப்பட்டு வரும் தகவல்கள் குறித்து கருத்து தெரிவித்த போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமது அரசியல் வாழ்க்கையில் பதவிகளை எதிர்பார்த்ததில்லை எனவும் கட்சிக்காக பல்வேறு அர்ப்பணிப்புக்களை தாம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் படி இன்றைய தினம் நடைபெறவுள்ள செயற்குழுக்கூட்டத்தின் போது சஜித் பிறேமதாஸாவை பிரதித் தலைவராக நியமிப்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

எவ்வாறெனினும் கட்சியின் தலைமைப் பொறுப்பு சஜித்திற்கு வழங்கப்படவேண்டுமென கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரைவில் ஈரான் விஜயம்



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈரானின் தலைநகர் தெஹ்ரானுக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 17ஆம் திகதி தெஹ்ரானில் நடைபெறவுள்ள ஜீ 15 மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

அவர் ஈரானிய ஜனாதிபதி முஹம் அக மதி நெஜாடை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் போது இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டு தடவைகள் ஈரானுக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## வடக்கில் 24 மணி நேரமும் மோட்டார் சைக்கிளில் பொலிஸ் ரோந்து

(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்று வருவதாக கூறப்படும் கப்பம் கோரல் , ஆட்கடத்தல் சம்பவங்களை தடுப்பதற்கென விசேட குற்றத் தடுப்புப் புலனாய்வு பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக வட மாகா ணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் லியூகே தெரிவித்தார்.

மக்கள் வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவித்த அவர் குற்றச் செயல்கள் இடம்பெறும் நேரத்தை அவ தானித்து அதனை கட்டுப்படுத்த விசேட மோட்டார் சைக்கிள் ரோந்து பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டார். (6)

## அமெரிக்க இராஜாங்க செயலர் இல.வெளிவிவகார அமைச்சருக்கு வாழ்த்து

புதிய வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்றுள்ள பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்க்கு அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீங்கள் இலங்கையின் சமாதானம் மற்றும் சுபீட்சத்திற்காக சேவையாற்றியதொரு மேம்பாடான பொதுச் சேவையை அனுபவத்தில் கொண்டுள்ளீர்கள். அமெரிக்கஇலங்கை ஒத்துழைப்பினை அபிவிருத்தி செய்து பங்களித்துவத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு நான் உங்களுடன் இறுதியாக வரும் காலங்களில் இணைந்து செயலாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

நான்அண்மையில் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எழுதியிருந்தது போல் பெருமளவில் அமைதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் ஓர் பெரும் சாதனையாகும். அரசாங்கத்திற்குக் கிடைத்த வலுவான ஆணையானது ஜனநாயக அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்வதற்கானதோர் சிறந்த சந்தர்ப்பமாவதுடன் சகல இலங்கை மக்களுக்கும் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் வருங்காலத்தில் ஏற்படுத்தக் கூடிய தொரு உண்மையான தேசிய இணக்கப்பாட்டை எய்துவதற்கும் இது ஓர் நல்ல சந்தர்ப்பமாகும்.

அதனை மேற்கொள்வது அவ்வளவு சுலபமாகாதெனினும் இச்செயற்பாடுகள் இலங்கையில் நீண்டகாலமாக எதிர்கொண்ட மோதலுக்கு ஒரு நிரந்தரத் தீர்வை அடைவதற்கு வழிகோலும். இலங்கையுடன் வலுவானதோர் நட்புறவைப் பேணுவதே அமெரிக்காவின் உண்மையான அபிலாஷையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)


## பதவி வெற்றிடம்

### பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- உதவி ஆசிரியர் (இருபாலாரும்)
- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- பிரதேச அலுவலகச் செய்தியாளர்கள் (ஆண்கள்)
- பிரதேச செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- சித்தரிப்பு கட்டுரையாளர்கள் (Feature Writer) (இருபாலாரும்)
- ஒப்பு நோக்குனர் (Proof Reader) (இருபாலாரும்)
- கணனி பக்க வடிவமைப்பாளர்கள் (இருபாலாரும்)
- ஒவ்செற் இயந்திரம் இயக்குநர்கள் மற்றும் பயிலுநர்கள் (ஆண்கள்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (இருபாலாரும்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)

குறிப்பு:-

விண்ணப்பதாரி ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு தனித் தனியாக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிபுத் திகதி: 15.05.2010

விண்ணப்பங்கள் யாவும்

பொது முகாமையாளர்
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

.................................................. பதவிக்கான விண்ணப்பம்

அலுவலகப் பாவனைக்கு

01. முழுப்பெயர் :-..............................
02. நிரந்தர முகவரி :-..............................
03. தற்காலிக முகவரி (இருப்பின்):-..............................
04. தொலைபேசி இலக்கம் :-..............................
05. பிறந்த திகதி :-..............................
06. பால் :-..............................
07. விவாகமானவரா :-..............................
08. தே.அ.அ.இல :-..............................
09. கல்வித் தகைமை :-..............................
10. க.பொ.த. (சா/தரம்) :-..............................
11. க.பொ.த (உயர்தரம்) :-..............................
12. மேலதிக தகைமைகள் :-..............................

மேற்கூறப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.


........................ ........................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

# களம் பல கண்ட யாழ் கோட்டை

24

கப்டன் கொத்தலாவல 19 பேரின் பெயர்களைத் கிட்டுவிடம் கொடுத்தார். கைதாகியுள்ள விடுதலைப்புலிகளின் அப்பெயர்ப் பட்டியலிலிருந்து ஐவரை கிட்டு தேர்ந்தெடுத்தார். இப்பேச்சுவார்த்தைகளில் வட மராட்சிப் பொறுப்பாளர் சூசை, தென்மராட்சிப்பொறுப்பாளர் கேடில்ஸ், வலிகாமம் பொறுப்பாளர் ஜொனி ஆகியோரும் கலந்து கொண்டனர். விடுதலைப்புலிகளின் முகாமில் விடுதலைப் புலிகள் வைத்திருந்த ஆயுதங்களை வாங்கிப்பார்த்த கப்டன் கொத்தலாவல வியப்புத்


கிட்டு


தெரிவித்தார்.

04, டிசம்பர், 1986 இல் கொழும்பிலிருந்து விஜே குமாரதுங்கவுடன் 35 பௌத்த குருமார் உட்பட 65 பேர் யாழ்ப்பாணத்திற்கு ஒரு பஸ்சில் புறப்பட்டு வந்தனர். அரசாங்கம் முதலில் இவர்களது பயணத்தைத் தடுத்த போதிலும் பின்னர் அனுமதித்தது. ஆனையிறவுக்கு இப்பால் அவர்களை விடுதலைப் புலிகள் தம்முடன் அழைத்து வந்தனர். கைதிகளுடன் அவர்கள் அளவளாவினர். எமது நிபந்தனையிலிருந்து இம்மியளவும் விலகமாட்டோம். எவ்வளவு காலம் சென்றாலும் சிப்பாய் களைக் கொல்லமாட்டோம் என அவர்களிடம் கிட்டுத் தெரிவித்தார். அவர்கள் திரும்பிச் சென்றனர். 27 டிசம்பர் அன்று காங்கேசன்துறையில் கைதிகள் பரிமாற்றம் பற்றி அரசுக்கும் புலிகளுக்கும் ஒரு பேச்சு வார்த்தை நடந்தது. காங்கேசன்துறைப் பட்டின சபை மண்டபத்தில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் வின்சன்ட் பெரேரா, கப்டன் கொத்த லாவல ஆகியோர் கலந்துகொண்டனர். தளபதி கிட்டு, அரசியற் பொறுப்பாளர் திலீபன், ரஹீம் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிபந்தனைப் படி கைதிகள் பரிமாற்றம் பின்னர் நிகழ்ந்தது.

1987 இன் ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகை தீவிரமாகியது. கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களுடன் பொம்பர் விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் யாழ்ப்பாண நகரத்தை அழிப்பதில் ஈடுபட்டன. ஏராளமான கட்டடங்கள் அழிந்தன. கோட்டையைச் சுற்றியுள்ள கட்டடங்கள் பலவும் அழிந்தன. பெரிய தபாற்கந்தோர், வீரசிங்கம் மண்டபம், றீகல் தியேட்டர், நீதி மன்றங்கள், மாநகரசபை, சுப்பிரமணியம் பூங்கா என்பன கோட்டை இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டன. சேதமடைந்த பெரிய தபாற்கந்தோர், வீரசிங்கம் மண்டபம் என்பனவற்றில் இராணுவம் சிலவேளை வந்து தங்கிவிடலாம் எனக் கருதப்பட்டதால் அக்கட்டடங்கள் புலிகளினால் தீயிட்டு அழிக்கப்பட்டன.

கோட்டையை சுற்றியுள்ள இரண்டு சிறிய இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவங்கள் குறிப்பிடத்தக்கவை. கோட்டைக்கு மேற்குப்பக்கத்திலுள்ள பொலிஸ் விடுதிகளில் இராணுவம் மினி முகாம் ஒன்றினை அமைத்திருந்தது. 22, மார்ச், 1987 இல் அதிகாலை அந்த முகாமை விடுதலைப்புலிகள் தாக்கினர். பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கடும் காயமடைந்த 13 பேரில் ஐவரை அங்கேயே விட்டுவிட்டு 8 பேரை கைது செய்து அழைத்து வந்தனர். ஆயுதங்கள் புலிகளுக்குக் கிடைத்தன. இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பறேசன் பூமாலை முடிந்திருந்த வேளையில் 1 ,ஜுன், 1987 அன்று அதிகாலை யாழ்ப்பாணம் தொலைத்தொடர்பு நிலையத்திலிருந்த இலங்கை மினி இராணுவமுகாம் மீது விடுதலைப்புலிகள் பயங்கரமான தாக்குதல் ஒன்றினை மேற்கொண்டனர். சக்தி வாய்ந்த குண்டுகள் பொருத்தப்பட்ட வாகனம் ஒன்று இந்த முகாமிற்குள் கொண்டு செல்லப்பட்டு வெடிக்கப்பட்டது. மூன்று இராணுவத்தினர் சரண் அடைந்தனர். ஏனையோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். முருகதாஸ் என்ற புலி உறுப்பினர் இந்தச் சண்டையில் மரணமடைய நேரிட்டது. ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து நிகழ்த்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் யாழ்ப்பாணச் சுற்றாடலில் 73 அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினர். 464 பேர் கடுங்காயங்களுள்ளாகினர். பொம்பர் குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் 86 பொதுமக்கள் பலியாகினர். 709 பேர் காயங்களுக்குள்ளாகினர். பாதிப்புற்றோர் இவற்றிலும் கூடுதலாக இருக்கலாமே தவிரக் குறைய வாய்ப்பில்லை. யாழ் கோட்டையிலிருந்து நிகழ்ந்த தாக்குதல்களினால் 600 வீடுகள் வரையில் சேதமுற்றன. எட்டு அரச கட்டடங்கள் முற்றாக அழிந்தன. 254 வர்த்தக நிலையங்களும் 6 ஆலயங்களும் 4 பாடசாலைகளும் சேதமுற்றன. சில முற்றாக அழிந்து போயின. இவற்றின் விளைவாக ஏறத்தாழ 692 மில்லியன் ரூபாய்கள் வரையில் சொத்துக்கள் அழிந்துள்ளன. இந்த முற்றுகைக்காலத்தில் இலங்கை இராணுவத்தினர் 136 பேர் கொல்லப்பட்டதுடன் 11 பேர் கைதாகினர். புலிகள் தரப்பில் உயிரிழப்புக் குறைவு. முற்றுகைக்காலத்திலும் மினி இராணுவ முகாம் தாக்குதல்களிலும் 7 பேர் வரையில் களப்பலியாகினர்.


இந்தியன் அமைதிப்படை

இந்த நிலையில் 29, ஜுலை, 1987 இல் இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசித்தது. 3, ஓகஸ்ட் அன்று விடுதலைப்புலிகளின் அனுமதியுடன் இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பிரவேசித்தது. இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேறும் வரை யாழ்ப்பாணக் கோட்டை அவர்களின் முகாமாக விளங்கியது.


ஷெல் வீச்சில் பலியான...கள்

03 ,ஆகஸ்ட் ,1987

அன்று ஒல்லாந்த கொமுசாறி போல விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தளபதிகிட்டு இருந்ததால் பின்வருமாறு யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகை பற்றிய விபரங்களைத் தனது சுப்ரிம் கொமாண்ட்டிற்கு அறிவித்தார்;

"..அன்பான தலைவரே, இந்திய அமைதிப்படையின் யாழ்ப்பாணக் கோட்டைப் பிரவேசத்துடன் தாங்கள் எனக்கிட்ட பணியினை முடித்துக்கொள்கிறேன். மூன்று ஆண்டுகள் இருபத்தி மூன்று நாட்களான தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகையில் எமக்கிடப்பட்ட பணி செவ்வனே நிறைவேற்றப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளிருந்து இலங்கை இராணுவத்தினர் வெளியேறாது முடக்கி வைத்திருந்துள்ளேன். 1986 காலகட்டம் வரை யாழ்ப்பாணக்கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல்கள் கூடுதலாக நிகழ்ந்தன. 1987 காலகட்டத்தில் பொம்பர் தாக்குதல்களின் துணையுடன் ஷெல் தாக்குதல்கள் நிகழ்ந்தன. ஷெல் தாக்குதல்களினால் யாழ் கோட்டையிலிருந்து நிகழ்ந்தவற்றையே குறிப்பிடுகிறேன். 73 அப்பாவி மக்கள் பலியாகினர். 464 மக்கள் கடுங்காயங்களுள்ளாகினர். பொம்பர் குண்டு வீச்சுத்தாக்குதலினால் 86 அப்பாவி மக்கள் பலியாகினர். 709 பேர் கடுங்காயங்களுள்ளாகினர். இது என்னளவில் பதியப்பட்ட தகவல்

**செங்கை ஆழியான்**

களாகும். இவற்றிலும் கூடுதலாக இருக்கலாமே தவிர குறைய வாய்ப்பில்லை.

..இதயத்தை நெகிழ வைத்த சில சம்ப வங்கள் உள்ளன. இன்னமும் மாறாத துயர வடுக்களாகவுள்ளன. ஐயனார் கோயிலில் திருமண நாளன்றே பலியான மணமகன், ஷெல் தாக்குதலால் ஆஸ்பத்திரியில் பலியான நோயாளர் ,மண்டைதீவுக்கடலில் கொல்லப்பட்ட மீனவர், துப்பாக்கிச் சூட்டிற்கு இரையான மத்தியகல்லூரி மாணவத் தலைவன் இப்படிப் பல மரணங்கள் துயரமானவை தாம்.

...நான் அறிந்தவரையில் 600 வீடுகள் வரை இத்தாக்குதல்களினால் சேதமுற்றுள்ளன. எட்டு அரச கட்டடங்கள் முற்றாக அழிந்தன. 254 வர்த்தக நிலையங்களும் 6 ஆலயங்களும் 4 பாடசாலைகளும் யாழ் கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் சேதமுற்றன. ஏறக்குறைய 692 மில்லியன் ரூபாய்கள் வரையில் சொத்துக்கள் அழிந்துள்ளன. இதற்குக் கூடுமேயொழிய குறையாது. இந்த முற்றுகைக்காலத்தில் என் கணிப்பின்படி 136 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பொலீஸ் விடுதி மினி இராணுவத்தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதுடன் 8 பேர் கைதாகினர். தொலைத் தொடர்பு நிலைய இராணுவத்தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதுடன் 3 இலங்கை இராணுவத்தினர் சரணடைந்தனர். தற்போது எம்மிடம் 11 கைதிகளுள்ளனர். எம் தரப்பில் எல்லாமாக இந்த முற்றுகைக்காலத்தில் 7 போராளிகள் மரணமடைந்தனர்.

(தொடரும்)

## தேசிய பூங்காக்களை அபிவிருத்தி செய்யும் புதிய வேலைத்திட்டம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள தேசியப்பூங்காக்களை அபிவிருத்தி செய்யும் புதிய வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைய தேசிய பூங்காக்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த நோக்கத்தை நிறைவு செய்து கொள்வதற்காக எதிர்காலத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படும் என்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பேராதனையில் அமைந்துள்ள தேசிய பூங்காவிற்கு விஜயம் செய்த அமைச்சர் இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

தேசிய பூங்காக்களின் மூலம் உள்நாட்டு சுற்றுலாக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காக பெற்றுக்கொள்ள கூடிய பங்களிப்புக்கள் தொடர்பாக அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளது.

தேசிய மிருகக்காட்சிச் சாலைகளையும் தேசிய பூங்காக்களையும் ஒன்றிணைத்து தேசிய மேம்பட்டுத்திட்டமொன்றை ஆரம்பிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான பங்களிப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும். மலர்கள், விசேடமான தாவரங்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலவாணியை பெற்றுக்கொள்ள முடியும். கமநெகும, சமூர்த்தி ஆகிய திட்டங்களைப் போன்று இந்த திட்டங்களை முன்னெடுக்கவும் விசேட படையணியொன்று அமைக்கப்படும் என்றும் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

## அதிகளவு பொருளாதார சுமைகளை ஏற்றுக்கொள்ள மக்கள் தயாராக வேண்டும்

### ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகளவு பொருளாதார சுமைகளை ஏற்றுக்கொள்ள மக்கள் தயாராக வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாண் மற்றும் கோதுமை மாவின் விலை உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அதேபோன்று ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் உயர்த்தப்படலாம் எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

எரிவாயு, எரிபொருள், நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்படலாம் என ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

லக்ஷ்மி யோகத்தை எதிர்பார்த்து காத்திருந்த தொழிலாளர்கள் சனிமாற்றத்தையே அனுபவிக்க நேரிட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர் ,

அரசாங்க ஊழியர்களுக்கு 2500 ரூபா சம்பாள உயர்வினை வழங்குவதாக அரசாங்கம் அளித்த வாக்குறுதி இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத் திட்டமொன்றை சமர்ப் பிக்க முடியாத காரணத்தினாலேயே அரசாங்கம் கணக்கு மீதான வாக்கெடுப்பு ஒன்றை நடத்த உத்திதேசித்துள்ளது. எனவும் குறைந்த வருமாணம் ஈட்டும் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த பொருளாதார நன்மைகளை அரசாங்கம் முடக்கியுள்ளதாகவும அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (6)

# கொழும்பு றோயல் கல்லூரி

## கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை-2010

## வழிகாட்டல் பரீட்சை

## இரசாயனவியல்-II — Chemistry II

*3 மணித்தியாலங்கள்* — *3 Hours*

2.a. $K_2CO_3(s)$, $MgCO_3(s)$, $NaHCO_3(s)$ ஆகியவற்றின் கலவை ஒன்றின் 2.37g மாறாத்திணிவு பெறப்படும்வரை வெப்பமாக்கப்பட்டது. இதன் போது பெறப்பட்ட மீதியின் திணிவு 1.62g .வெளியேறிய நீராவியின் திணிவு 0.09g ஆகும். (Na=23,K-39,Mg=24,O=16,H=1,C=12

i. மேற்படி வெப்பப்பிரிகையின்போது நடைபெறும் தாக்கங்களிற்கு சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளை எழுதுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ii. மாதிரியில் காணப்படும் K2$CO_3$, $MgCO_3$, $NaHCO_3$ என்பவற்றிற்கு இடையேயான மூலர் விகிதம் யாது?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................


b. 450$^0$C இல் $SO_2$ (g), $SO_3$ (g), $O_2$(g) ஆகியவற்றின் தோன்றல் வெப்பவுள்ளுறைகள் முறையே 298 KJmol-[1],-401KJmol-[1],0

$$2SO_2(g) + O_2(g) \longrightarrow 2SO_3(g)$$

எனும் தாக்கத்தின் சாலக சக்தி 202 KJmol-[1]Pt ஊக்கி முன்னிலையில் மேற்படி தாக்கத்தின் ஏவற்ச் சக்தி 150KJmol-[1]

$$\text{(i)}\quad 2SO_2(g) + O_2(g) \rightleftharpoons 2SO_3(g)$$

எனும் சமநிலை தாக்கத்தின் ஏவற்சக்திக்கான பொருத்தமான சக்தி மட்ட வரைபடத்தை வரைக.




ii. Pt ஊக்கியுள்ள போது மேற்படி தாக்கத்தின் ஏவற்சக்தியைக் காட்டுவதற்கு மேலே அதே வெப்பவுள்ளுறை வரைபடத்தில் குற்றுக் கோடுகளை (....) ப் பயன்படுத்துக.

iii. மேற்படி சமநிலையில் பின்வரும் சந்தர்ப்பங்களில் பிற்தாக்கத்தின் ஏவற்சக்தியின் பெறுமானங்கள் யாதாகவிருக்கும்?

i. ஊக்கி இல்லாத போது

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ii. ஊக்கி உள்ள போது

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

iv. மேற்படி சம நிலையில் பின்வருவனவற்றால் ஏற்படும் பாதிப்பை விளக்குக.

i. அமுக்கம்

..........................................................................................


ii. வெப்பநிலை

..........................................................................................

iii. ஊக்கி

..........................................................................................

3.a. benzene,toluene,Phenol என்பவற்றை மட்டும் கொண்ட நிலக்கரியின் ( Coal ) காய்ச்சிவடிப்பால் எண்ணெய் பெறப்படும். அவற்றின் பெறுதிகளை அல்லது கூறுச் சேர்வைகளை வேறுபிரிப்பதற்கு பின்வரும் செயற்பாடுகள் பயன்படுத்தப்பட்டது. இச் செயற்பாட்டின் போது உருவாகும் சேதனச் சேர்வைகளின் கட்டமைப்புகளை கீழே தரப்பட்ட பெட்டிகளில் வரைக.
(படைகளை (வேறுபிரிப்பதற்கு பிரிபுனல் பயன்படுத்தப்பட்டது)





b. பின்வரும் தாக்குபொருட்களைப் பயன்படுத்தி கீழே உள்ள பிரித்தெடுப்பில் எவ்வாறு A,B,C எனும் சேர்வைகளை பெறுவீர் எனக் கூறுக.


தாக்குப்பொருட்கள்

Conc $HNO_3$ , Conc $H_2SO_4$ , $NaNO_2$ , Conc HCl, Fe , NaOH, பனிக்கட்டி, $PCl_5$

(i)




(ii)



# இரசாயனவியல்-II Chemistry II

*3 மணித்தியாலங்கள்* *3 Hours*

c. $C_4H_8O_2$ ஐ மூலக்கூற்றுச் சூத்திரமாகவுடைய சேதனச் சேர்வை A பிரடியின் சோதனைப் பொருளுடன் செம்மஞ்சள் வீழ்படிவை கொடுத்தது. சேர்வை A வெப்பப்படுத்துவதால் $Br_2$ (*l*) ஐ நிற நீக்கும சேர்வை B ஐ வெளிவிட்டது. சேர்வை B யிற்கும் $Br_2$ (*l*)க்கும் இடையான தாக்கத்தில் இரண்டு சமச்சீர் அற்ற காபனைக் கொண்ட சேர்வை C உருவாகியது. சேர்வை B யிற்கும் HBr க்கும் இடையேயான தாக்கத்தில் ஒரு சமச்சீர் அற்ற காபனைக் கொண்ட சேர்வை D உருவாகியது. சேர்வை D ஆனது $NH_3$ உடன் தாக்கம் புரிந்து சேர்வை E உருவாகியது.

i. A,B,C,D,E ஆகியவற்றின் கட்டமைப்புகளை கீழே உரிய பெட்டிகளில் வரைக.

A

B

C

D


E

ii. பிரடியின் சோதனைப் பொருளுடன் உருவாகும் சேர்வையின் கட்டமைப்பை வரைக.

iii. சேர்வை B இற்கும் HBr இற்கும் இடையேயான தாக்கத்திற்கான பொறிமுறையைத் தருக. பொறிமுறையின் வகையைக் குறிப்பிடுக.

iv. சேர்வை E இற்கும் $NaNO_2/HCl$ இற்கும் இடையே நடைபெறும் தாக்கத்தில் உருவாகும் சேர்வையின் கட்டமைப்பை வரைக.

4. a.i கீழே தரப்பட்ட சேர்வையின் IUPAC பெயரிட்டை எழுதுக.




..............................................................................................

(ii) $CH_3COCl$, (A)  $CH_3COOCH_3$, (B)  $CH_3-C(=O)-O-C(=O)-CH_3$, (C)  $CH_3-C(=O)-NH_2$ (D)

ஆகிய சேதனச் சேர்வைகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.




i. நீர்பகுப்பு வீதம் அதிகரிக்கும் ஒழுங்கு

..............................................................................................

ii. பரிவுக்கட்டமைப்புக்களின்ள உறுதியின் இறங்குவரிசை

..............................................................................................

iii. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.


| | தாக்கு பொருள் | சோதனைப் பொருள் | விளைவு |
|---|---|---|---|
| I. |  | Zn(Hg) / Conc. HCl | |
| II. |  | 1. $LiAlH_4$<br>2. $H^+/H_2O$ | |
| III |  | 1. $CH_3MgBr$<br>2. $H^+/H_2O$ | |

4. b. ஒவ்வொரு திட்டத்துடனும் தரப்பட்டவற்றிலிருந்து மாத்திரம் சோதனைப் பொருட்களையும் கரைப்பான்களையும் தெரிந்தெடுத்துப் பின்வரும் தொகுப்புக்களின் திட்டங்கள் A,B ஆகியவற்றை நிறைவு செய்க.
பொருத்தமதான சேர்வைகளின் கட்டமைப்புகளை பெட்டிகளினுள்ளும் சோதனைப் பொருட்களை/ கரைப்பான்களை வட்டங்களினுள்ளும் எழுதுக.

i. திட்டம் A

சோதனைப் பொருட்களும் கரைப்பான்களும்


HBr, dil NaOH, $P_2O_5$, Mg, $C_2H_5OC_2H_5$, $H_2SO_4$, $KMnO_4$




ii. திட்டம் B

சோதனைப் பொருட்களும் கரைப்பான்களும்

(benzene) $PCl_5$, $CH_3Cl$, $AlCl_3$, $H_2SO_4$, $KMnO_4$, $Br_2$(aq)
Conc $HNO_3$, Sn, Conc HCl, NaOH



# 21 ஆம் நூற்றாண்டில் ஆசிரியர் எதிர்பார்ப்புகளும் - இடர்பாடுகளும்

2

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பேராசிரியர் ப.சந்திரசேகரம் நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற பேராசிரியர் ப.சந்திரசேகரன் நினைவுப்பேருரையில் '' 21 ஆம் நூற்றாண்டில் ஆசிரியர் - எதிர்பார்ப்புகளும் இடர்ப்பாடுகளும்'' என்ற பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி அனுஷ்யா சத்தியசீலன் ஆற்றிய உரை இங்கு பிரசுரமாகின்றது. (ஆ-ர்)

| பரப்புகள் | பண்புகள் |
|---|---|
| 1. உடலியல் (Physical) | தோற்றப்பாடு, சுகாதாரம், தொடர்பாடலும் ஆடை அணிதலும். |
| 2.தனிப்பட்ட (Individual) | வாழ்வின் நோக்கங்கள், தேசபக்தி, நல்லியல்புகள் நேரந் தவறாமை. |
| 3கற்பித்தல் தேர்ச்சிகள் (Teaching Competence) | கற்பித்தலிலான ஆர்வம் மாணவர் சார்பான நடத்தை , வகுப்பறை முகாமைத்துவம் , பாடப்புல அறிவு , ஆய்வுகளிலான ஆர்வம் , பாரபட்சமற்ற நடத்தை , தனியாள் மீதான அக்கறை. |
| 4 கலாசாரம் (Cultural) | தன் கலாசாரம் மீதான ஈடுபாடு , இதர கலாசாரங்களின் மீதான ஈடுபாடு , பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுக்கும் ஆர்வம் , அவற்றிலான பங்களிப்பு. |
| 5. உணர்வு (Emotional) | உணர்வுசார் முதிர்ச்சி , மனிதத்துவம். |
| 6. சமூகம் (Social) | சமூகத்துடனான தொடர்புகள் , பங்கெடுப்பு சமூகத்துடனான மனப்பாங்கு. |
| 7இதர விடயங்கள் (Micellaneous) | |

1978 இல் பொதுநலவாய நாடுகள் செயலகத்தினால் பிரசுரிக்கப்பட்ட குறிப்பேடொன்றில் ஆசிரியர் பொறுத்த விரிவான எதிர்பார்ப்புகளாகப் பின்வருவன அடையாளம் காணப்பட்டன.

1.பல்வேறு முறைகளைக் கையாண்டு கல்வியூட்டுபவராக இருப்பதுடன் கற்றல் -கற்பித்தல் செயற்பாடுகளை சிறந்த முறையில் ஒழுங்குசெய்பவர்.

2. வெறுமனே அறிவை வழங்குவதுடன் மட்டும் நின்றுவிடாது கிடைக்கப்பெறும் மூலவளங்களை நன்கு பயன்படுத்தி மாணவர்களின் கற்றலுக்குரிய சந்தர்ப்பங்களை ஏற்பாடு செய்பவர்.

3. சுயகற்றலைத் தூண்டி ஆசிரியர் - மாணவர் உறவில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துபவர்.

4. நூதனமான கல்வி நுட்பங்களைக் கூடுதலாகப் பயன்படுத்துபவராக, அதற்கு வேண்டிய அறிவு, திறன்களைக் கொண்டவராகவுமிருப்பவர்.

5. பாடசாலையில் கடமையாற்றும் ஏனைய ஆசிரியர்களுடன் நட்புறவினை வளர்ப்பவர்.

6.பெற்றோருடனும் சமூகத்துடனும் நெருங்கிய உறவினை ஏற்படுத்துபவராக இருப்பதுடன் சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்டவராகவும் இருப்பவர்.

கிளிக் (Glick) ,வான் ஷகாக் (Van Sahaack 1982) என்போர் தமது ஆய்வுகளினூடாக ஆசிரியர்களிடம் சமூகமானது பின்வரும் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டனர்.

1. கற்றலில் அதீத விருப்பு

2. கற்பித்தலில் ஈடுபாடு

3. ஒழுக்கம் சார் நடத்தைகளில் கவனம்

வான் ஷகாக் (Van Sahaack) ஆசிரியர் சார்ந்த எதிர்பார்ப்புகளை மேலும் விரிவுபடுத்தினார். அவையாவன:

1.கற்பித்தலில் ஆர்வம் மிக்கவர்

2.சுயகட்டுப்பாடுடையவர்



3 திறமையாகத் தொடர்பாடல் செய்பவர்

4. மாணவர்கள் பால் ஈடுபாடும் கரிசனையும் கொண்டவர்

5.வாண்மை விருத்தியில் அக்கறை கொண்டவர்.

6.தொழில் இலட்சியம் மிக்கவர்.

ஸ்டோன் , ஸ்வானோஸ்தி (1987), கிரானீடி (1989) போன்றோர் ஆசிரியர் பற்றிய எதிர்பார்ப்புகளாகப் பின்வருவனவற்றைச் சுட்டினர்.

1. அர்ப்பணிப்பு

2.மாணவர் மீதான உண்மையான கவனம்.

3. புத்தாக்கம்

காம்பெல் (Cambell 1988) ஆசிரியர் தொடர்பான எதிர்பார்ப்புகளாகப் பின்வருவற்றை அடையாளப்படுத்தினார்.

1. கற்பித்தலின் முக்கியத்துவத்தில் அதீத நம்பிக்கை

2. வாண்மை விருத்தியில் தீவிர ஈடுபாடு

3. வாண்மைச் சுதந்திரம் பற்றிய தீவிர உணர்வு

4.கற்பித்தல் தொழில் வேறு எவருடைய தலையீடுகளுக்கும் இடமளிக்கப்படாத தன்மையில் நம்பிக்கை.

ஆசிரியர் என்றால்'' சிறந்த /திறமையான கற்பித்தலை மேற்கொள்ளுபவர்'' என்ற கருத்தும் அக்காலப்பகுதியில் அழுத்தப்பட்டுவந்துள்ளது. அங்கு கற்பித்தலை மேற்கொள்பவர் யாவருமே ஆசிரியராகக் கருதப்படத் தக்கவரல்லர். உண்மையில் பொருத்தமான, திறமையான கற்பித்தலை மேற்கொள்பவரே ஆசிரியர் என ஏற்றுக்கொள்ளத்தக்கவர் என்று பொருள் கொள்ளப்பட்டமையினையும் உணரமுடிகின்றது. அவ்வாறாயின் சிறந்த/ திறமையான கற்பித்தல் என்றால் என்ன? என்பதனையும் சிறிது கவனத்திற்கொள்ளுதல் பொருத்தமானதாகும்.

### சிறந்த/ திறமையான கற்பித்தல் - சில விளக்கங்கள்.

சிறந்த /திறமையான கற்பித்தல் என்றால் என்ன? என்பது பற்றிய ஒருசில விளக்கங்களை இங்கு நோக்குவோம் சிறந்த கற்பித்தல் என்றால்''மாணவர் சமூகம் சார்ந்த கல்வித் தேவைகளை நிறைவேற்றும் செயற்பாடுகள்''என்றும்,'' மாணவர்களுக்கான அறிகை, திறன், மனப்பாங்கு, விழுமியம்சார் தேவைகளையும் மாற்றங்களையும் பொருத்தமாக ஏற்படுத்த ஆசிரியர் மேற்கொள்ளும் வகுப்பறைச் செயற்பாடுகள்'' என்றும் விளக்கமளிக்கப்பட்டன. கியூக்ஸ் (Hughes1960) என்பவர் ''சிறந்த கற்பித்தல் என்பது ஓர் ஆசிரியர் ,தான் தொடர்பு கொள்ளும் மாணவன் , மாணவர் குழாத்தை பொருத்தமான அறிவுத் தேடலுடன் இணைப்பதோடு புதிய சவால்கள், பிரச்சினைகளுக்கு தம்மால் இயன்றவரை முகம் கொடுத்துப் போராட ஏற்ற வளர்ச்சியையும் விருத்தியையும் அவர்கள் பால் உருவாக்குதலும் ஆகும்''என விளக்கமளித்தார்.

கலாநிதி (திருமதி) அனுஷ்யா சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர் , தரம் I
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(தொடரும்)

# கொழும்பில் மூடப்பட்டிருந்த பாதைகள் மீண்டும் திறப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களில் கொழும்பு நகரில் மூடப்பட்டிருந்த பாதைகள் திறக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக கொழும்பின் சில பிரதேசங்களில் பாதைகள் மூடப்பட்டிருந்தன.

இவ்வாறு பாதைகள் மூடப்பட்டிருந்தமையினால் பொதுமக்கள் பயணங்களை மேற்கொள்ளும் போதுபல்வேறு சிரமங்களையும் நேரவிரயத்தையும் எதிர்நோக்கிய தாக தெரிவிக்கப்படுகிறது.

பொது மக்களின் நலனை கருத்திற் கொண்டு பாதைகள் மீளவும் திறக்கப் பட்டுள்ளன.

மூடப்பட்டிருந்த கொழும்பு பௌத்தலோக மாவத்தையிலிருந்து தும்முல்ல சந்தி வரையிலான பாதை பொது மக்கள் போக்கு வரத்திற்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

கொழும்பு கெப்பட்டிப்பொல வீதியும் மக்கள் போக்குவரத்திற்காக திறந்து விடப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.எம்.டி ஹேரத் தெரிவித்துள்ளார்.(6-4)

# இலவச வைத்தியசேவை

(மருதங்கேணி)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வைத்தியசாலையில் கிழமையில் இரண்டு நாட்கள் (புதன்,ஞாயிறு) இலவசமாக வைத்திய சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதில் சகல நோய்களுக்கும் வைத்தியர்களால் பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-35)

# அரச பொது நிர்வாக சேவை பணியாளர்களுக்கு மும்மொழி பயிற்சி வழங்க நடவடிக்கை

## அமைச்சர் நாவின்ன தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசின் பொது நிர்வாக சேவைப் பணிப்பாளர்களுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் பயிற்றுவிக்கும் புதிய திட்டத்தை தொடங்குவதற்கான நடவடிக்கைகளை தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் நாவின்ன தெரிவித்துள்ளார்.

அரசு மேற்கொண்டுவரும் புனரமைப்பு பணிகளின் ஒரு பகுதியாக பல இன மக்களுக்கு இடையே தொடர்பினை ஏற்படுத்தும் பொருட்டு நாட்டின் அனைத்து பகுதிகளிலும் அந்தந்தப் பகுதி ஆணையங்களின் உதவியுடன் மொழி பயிற்றுவிப்புமையங்களை தொடங்க அரசு முடிவெடுத்துள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் எதிர்காலத்தில் பதவியுயர்வு, சம்பள உயர்வு ஆகியவற்றை பெற இத்திட்டம் வாய்ப்பாக அமையும் என்பதையும் மூன்று மொழிகளையும் கற்றுக் கொள்வது சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதோடு மட்டுமல்லாது மூன்று தரப்பு மக்களுக்கும் இடையே நட்புறவு பாலத்தையும் ஏற்படுத்த உதவும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (6)

## அரச வைத்தியசாலைகளில் நிலவும்

# மருந்துத்தட்டுப்பாடு மூன்று மாதங்களில் முழுமையாக நிவர்த்தி செய்யப்படும்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

உடனுக்குடன் தேவைப்படும் மருந்துப் பொருட்களை துரிதமாக வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அது குறித்து திறைசேரி செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். சுகாதார அமைச்சைப் பொறுப்பெடுத்த பின்னர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முதலாவது செய்தியாளர் மாநாட்டை அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்தினார். இச்செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் மேற் கொண்டவாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் குறிப்பிடுகையில்,



மஹிந்த சிந்தனை அடிப்படையில் நாட்டு மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு சகல நடவடிக் கைகளும் எடுக்கப்படும்.

அதன் அடிப்படையில் அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துப் பொருள் தட்டுப்பாடு அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குள் முழுமையாக நிவர்த்தி செய்யப்படும். மேலும் உடனுக்குடன் தேவைப்படும் மருந்துப் பொருட்களை துரிதமாகப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது விடயமாக திறைசேரிச் செயலாளரான கலாநிதி பி.பி.ஜயசுந்தரவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதுடன் அரசாங்க சுகாதார சேவையை மேலும் மேம்படுத்தும் நோக்கில் அமைச்சர்களதும் சகல எம்.பிக்களதும் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படும். மேலும் சுகாதார சேவையை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் சகல தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அடுத்துவாரம் அழைத்துக் கலந்துரையாடவுள்ளதோடு ஊழியர் ஆலோசனை சபையை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (6)

## மன்னாரில் எண்ணெய் ஆய்வு; அடுத்தவருடம் ஆரம்பிக்கப்படும்

### பெற்றோலிய வள அமைச்சர் சுசில்பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)



மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் ஆய்வு நடவடிக் கைகள் அடுத்த வருடம் மே மாதமளவில் ஆரம்பிக்கப் படுமென பெற்றோலியவள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தற்போது மேற்கொள்ளப்படும் ஆரம்பக்கட்ட ஆய்வு நடவடிக்கைகள் அடுத்த வருடம் பூர்த்தியடையுமெனவும் இதன்படி அடுத்த ஆண்டு மே மாதம் எண்ணெய் ஆய்வு நடவடிக்கைகளை மன்னார் கடற்பரப்பில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் வட பகுதி, மன்னார் மற்றும் அம்பாந் தோட்டை ஆகிய மூன்று கடற்பரப்புகளில் எண்ணெய் வளம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர் அவற்றுள் மன்னார் கடற்பரப்பு 8 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு சர்வதேச நடைமுறைகளுக்கு அமைய ஆரம்பக்கட்ட ஆய்வுகள் நடைபெற்றுவருவதாக கூறினார்.

இந்த ஆரம்பக்கட்ட ஆய்வுகளின் பின்னர் 2011 மே மாதமளவில் எண்ணெய் வள ஆய்வுக்காகக் கடலுக்கடியில் தோண்டப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (6)

## ஜி.எஸ். பி.பிளஸ் வரிச்சலுகை குறித்த பேச்சுவார்த்தைகள் இலங்கைக்கு சாதகம்

### அமைச்சர் ஜி.எல்.பிரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை சம்பந்தமாக இதுவரை மேற் கொள்ளப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் இலங்கைக்கு சாதகமாக உள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீஎல் .பீரிஸ் தெரிவித்துள்ளார். மேற்படி வரிச்சலு கையை பெற்றுக் கொள்வதற்கான முதல் கட்ட பேச்சுவார்த்தையை வெளிநாட்டலு வல்கள் அமைச்சின் செயலாளர் றொமேஸ் ஜயசிங்க தலைமை யிலான குழு நடத்தியுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கென வெளிநாட்டமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவில் நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, நீதியமைச்சின் செய லாளர் சுஹந்த கே.கம்லத், சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் ஆகியோர் ஐரோப்பிய யூனியனு டன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (6)

## சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற

# 3 பெண்கள் சீதக்கங்குல ஆற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

சிவனொளிபாதமலை அடிவாரத்தில் இருக்கின்ற சீதக்கங்குல ஆற்றிலிருந்து மூன்று பெண்களின் சடலங்களை மீட்டுள் ளதாகவும் காணாமல் போன குழந்தையைத் தேடும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட் டுள்ளதாகவும் பொலிஸார் அறிவித்துள்ள னர்.

சிவனொளிபாத மலைக்கு பாதயாத்தி ரையாகச் சென்றிருந்தவர்களில் மூவரே இவ்வாறு சடலமாக மீட்ப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

சிவானொளிபாத மலையிலிருந்து இரத் தினபுரி செல்கின்ற வழியில் இருக்கின்ற சீதக்கங்குல ஆற்றில் குளிக்கும் போதே பிரஸ்தாபப் பெண்கள் மூவரும் ஆற்று நீரோட் டத்தில் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் அவர் களுடன் குழந்தையொன்றும் இவ்வாறு இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கிப் பலி யாகியிருப்பதாகவும் நம்பப்படுகின்றது.

பலியானவர்கள் எந்தப் பிரதேசத்தி லிருந்து சிவனொலிபாத மலைக்கு யாத்திரிகர் களாக வருகை தந்தனர்.? ஆற்றில் இழுத் துச் செல்லப்பட்ட குழந்தைக்கு என்ன நடந் தது போன்ற விபரங்கள் தெரியவரவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (6-4)

## பரிசுப்பொதிகள் அன்பளிப்பு

பருத்தித்துறை தம்பசிட்டி சர்வோதய முன்பள்ளி சிறார்களுக்கு முன்பள்ளி விளையாட்டு போட்டியை முன்னிட்டு தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 45 பரிசு பொதிகள் வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் நடைபெற்ற விளையாட்டு போட்டியில் வைத்து இப் பரிசு பொதிகள் வழங்கப்பட்டுள்ளது. (4-35)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஆடுதீண்டாப்பாளை

Botanical Name-Aristolochia bracteolata.
Family - Aristolochiaceae.
Engl-Worm Killer.
Sinh-Sapsanda.

மென்மையானது, பசுமையான பல கிளைகளைக் கொண்டதும் பல்லாண்டு காலம் வாழக்கூடிய செடி வகையாகும். இலைகள் தனியிலை எதிரிலை அடுக்கம் கொண்டவை ; 1.2 -5 செ.மீ. நீளமும், நீள் வட்டமும் சாம்பல் நிறம் கொண்டவை. இலைக் காம்பு 1.2 -1.8 செ.மீ. நீளமுடையவை. ஒழுங் கான, இருபாலான பூக்களைக்கொண் டவை. கடுமையான ஊதாநிறப் பூக்கள் காணப்படும். பழங்கள் சோணைகளாக 12 நரம்பமைப்புக்களைக் கொண்டிருக்கும். பெரிய விதைகள் 6.செ.மீ நீளமானவை. பூக் களை தை மாதத்தில் புரட்டாதி மாதத்திலும் அவதானிக்கலாம்.

**பரம்பலும் இனவிருத்தியும்:**


வறண்ட பிரதேசங்களில் இதன் பரம்பல் அதிகம் (Dry Sandy regions ) விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

**மருத்துவப்பயன்கள்**

* இதன் இலைகளை சேகரித்து தேவை யானளவு வெந்நீரில் 2 மணிநேரம் ஊற வைக்க வேண்டும். உதாரணமாக 10 கிராம் இலை களை 100 மில்லி வெந்நீரில் ஊற வைத்து 15-30 மில்லி அளவு அருந்தி வர கிரந்தி, கரப்பான் முதலியான நீங்கும். வயிற் றிலுள்ள புழுக்கள் சாகும்.

* இதன் விதைகளை சேகரித்து பொடிசெய்து 4 கிராம் அளவு எடுத்து 1 அரைத்து 5 கிராம் அளவு வெந்நீரில் கொடுக்க வேண்டும்.

* இதன் முழுச் செடியில் இருந்து சாறு எடுத்து, சமஅளவு நல்லெண்ணைய் சேர்த்து; காய்ச்சி வடிகட்டி கரப்பான், கரும்படை



மலக்கட்டும் தீரும்.

* ஆடுதீண்டாப்பாளை வேர் பாம்புக் கடிக்கு பயன்படுத்தப்படும் ஒரு மூலிகையா கும். இதன் வேர்களை சேகரித்து நன்றாக கழுவி, அம்மியில் வைத்து பட்டுப் போல்

* ஆடு தீண்டாப்பாளை இலையையும் மரத்தின் இளந்தளிரையும் கைப்பிடி அளவு எடுத்து அம்மியில் வைத்து மை போல அரைத்து 5 கிராம் அளவு அரை டம்பளர் தயிரில் போட்டு கலக்கி தொடர்ந்து 3 நாட்க ளுக்கு காலையில் மட்டும் கொடுக்க சீதபேதி குணமாகும்.

* ஆடுதீண்டாப்பாளை கைப்பிடியளவு எடுத்து ( இலை,தண்டு, வேர் ) அம்மியில் வைத்து 1/2 தேக்கரண்டியளவு மிளகு சேர்த்து மைபோல அரைத்து அதை இரண்டு பங்காக்கி காலையில் ஒரு பங்கும், மாலை யில் ஒரு பங்குமாக 3 நாட்கள் கொடுத்து வந்தால் கர்ப்பப்பையில் உள்ள நுண்ணிய கிருமிகள் அழிந்து கர்ப்பப்பை பலமடையும்.

*வட்டப்புழுவிற்கு(round worm )ஆடு தீண்டாப்பாளை வேர் 10 கிராம் அளவு எடுத்து 4 மடங்கு நீர் விட்டு 1/4 ஆக வற்றக் காய்ச் சிய குடி நீருடன் ஒரு மேசைக்கரண்டி ஆம ணக்கெண்ணைய் சேர்த்துக் கொடுக்க நீங் கும். ஆடுதீண்டாப்பாளை வேர்களை கசக்கி சாறு எடுத்து ஆமணக்கெண்ணையுடன் சேர்த்து கரப்பானிற்கு பூசலாம்.

* இச் செடியின் உடன் சாறு 200 மில்லி எடுத்து, தேங்காயெண்ணெய் 300 மில்லி அளவு எடுத்து , இரண்டையும் கலந்து அடுப் பேற்றி பத்தத்தில் காய்ச்சி இறக்கி 20 கிராம் விளைவு கற்பூரத்தை பொடித்துப் போட்டு ஆறியதும் புட்டியில் இட்டு வைத்துக் கொள்ளவும்.


நீர் வடியும் கரப்பான் சிரங் கிற்கு பூசி வர புண்கள் முற்றாக ஆறும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

# இயேசு கிறிஸ்துவின் உடலை மூடப்பயன்படுத்தப்பட்ட புனித துணி

## பாப்பரசரால் காட்சிப்படுத்தப்பட்டது

இயேசு கிறிஸ்து புதைக்கப்பட்டபோது அவரது உடலை மூடப் பயன்படுத் தப்பட்டது என நம்பப்படும் வெள் ளைத் துணியானது பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பரால் ஞாயிற் றுக்கிழமை ஆராதனைகளின் போது காட்சிப் படுத்தப்பட்டது.



இயேசுவின் துன்பத்தை இந்தப் புனித துணி நமக்கு ஞாபா கப்படுத்துவதாக உள்ள தென பாப்பரசர் கூறினார்.

மேற்படி புனித துணியின் முன்பாக பல நிமிடங்கள் பிரார்த்தனையில் ஈடுபட்ட பாப் பரசர் பாரம்பரிய வழக்கப் பிரகாரம் அத் துணியை தொடவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

மனித உடலின் பிரதிமையொன்றைக் கொண்டுள்ள மேற்படி புனித துணி கடந்த 10 ஆண்டுகளில் காட்சிப்படுத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

பொது மக்கள் பார்வைக்காக குண்டு துளைக்காத பெட்டியில் 6 வாரங்களுக்கு காட்சிப்படுத்தப்படும் இந்த புனித துணியை சுமார் இரு மில்லியன் மக்கள் பார்வை யிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த் துணியை 1988 ஆம் ஆண்டு பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அது மத்திய காலத்தைச் சேர்ந்தது என கருத்து வெளியிடப்பட்டது. ஆனால் அந்தத் துணி யிலான காபன்களைப் பரிசோதித்த போது அதன் காலம் வேறுபட்டதாக இருந்தாக தெரி விக்கப்படுகிறது.

இந்நிலையில் மேற்படி புனித துணி தொடர்பிலான விஞ்ஞான ரீதியிலான சர்ச்சை குறித்து பாப்பரசர் இதன் போது எதனையும் குறிப்பிட்டுக்கூறவில்லை. பாரம் பரிய வழக்கப்படி இந்த புனித துணியை பேணு பவராக பாப்பரசர் விளங்குகின்றார். (6-4)

# நியூயோர்க் சதுக்கத்தில் கார்க்குண்டு பொருத்திய நபர் தொடர்பில் ஆதாரம்

## இரகசிய வீடியோ பதிவில் உறுதி

(நியூயோர்க்)

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் உள்ள டைம் சதுக்கம் சுற்றுலா தலமாகும். இங்கு எப்போதும் மக்கள் நடமாட்டம் நிறைந்து காணப்படும். கடந்த சனிக்கிழமை இரவு அங்கு வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கார் நின்றது கண்டுபிடிக்கப்பட்டது.

சரியான நேரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட தால் அந்த குண்டு செயல் இழக்க வைக்கப் பட்டது. இதனால் மிகப் பெரிய உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது.

இந்த கார் குண்டு வைத்தது யார் என தெரியாமல் இருந்தது. ஆனால் இதற்கு நாங்கள் தான் பொறுப்பு என பாகிஸ்தான் தலிபான்கள் பொறுப்பு ஏற்றனர். இதை அமெ ரிக்க பொலிஸார் மறுத்தனர்.

இந்த நிலையில் கார் குண்டு வைத் தவன் யார்? என்ற விவரம் தற்போது தெரிய வந்துள்ளது.

நியூயோர்க்கின் முக்கிய பகுதியான டைம் சதுக்கத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக 82 கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இச் சம்பவம் நடைபெற்ற பின் இந்த சதியில் சம் பந்தப்பட்டவன் யார் என கண்டறிய கமராக்க ளின் படச்சுருள்கள் நியூயோர்க்கில் உள்ள பொலிஸ் ஆய்வு கூடத்துக்கு அனுப்பப்பட்டன.

அங்கு நடத்தப்பட்ட சோதனையில் ஒரு கமரா படச்சுருளில் குண்டுவைக்கப்பட்ட காரின் அருகே இருந்து ஒரு வெள்ளை நிற மனிதர் சென்றது தெரியவந்தது. அவனுக்கு 40 வயது இருக்கும் அவ் கறுப்பு நிற சட் டையும் அதற்குக் கீழே சிவப்பு நிற உள்ளா டையும் அணிந்திருந்தான்.

அவன் தான் அணிந்திருந்த கறுப்பு நிற சட்டையை கழற்றினான். பின்னர் அவன் அங்கிருந்து ஓட்டம் பிடித்தான். இவை அனைத்தும் அந்த வீடியோ கமராவில் பதி வாகி உள்ளது. இந்த தகவலை நியூயோர்க் நகர பொலிஸ் தலைமை அதிகாரி ரேமண்ட் கெல்லி தெரிவித்துள்ளார்.

குண்டு வைக்கப்பட்டிருந்த கார் விளை யாட்டு உபகரணங்கள் விற்பனை செய்யும் ஒரு நிறுவனத்துக்கு சொந்தமானது. ஆனால் அந்த காரை அங்கு நிறுத்தி விட்டு சென்ற டிரைவர் யார் என்பது இன்னும் கண்டுபிடிக்கபடவில்லை. (6)

# அமெரிக்காவில் வெள்ளம்; 22 பேர் பலியாகினர்

(நாஷ்விலே)

அமெரிக்காவின் டென்னிசி மாகாணத் தில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வரு கிறது. இதனால் அங்குள்ள கும்பர் அலாண்ட் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற் பட்டுள்ளது.

எனவே, நாஷ்விலே நகரம் வெள்ளத் தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அங் குள்ள பள்ளிகள், வர்த்தக நிறுவனங்கள், ஹோட்டல்கள், மதுபார்கள் மூடப்பட்டன. ஹோட்டல்களில் தங்கவைக்கப்பட்டிருந்த 500 பேர் வெளியேற்றப்பட்டனர்.

தெருக்கள் மற்றும் ரோடுகள் வெள்ளக் காடாய் காட்சியளித்தது. தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையினால் மிசிசிப்பி உள் ளிட்ட பக்கத்து மாகாணங்களிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மழை வெள்ளத்தில் சிக்கி 22 பேர் பலியாகி உள்ளனர். ஆயிரக் கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

டென்சி மாகாண கவர்னர் பில் பிர டெசன், கென்டுகி மாகாண கவர்னர் ஸ்டீவ் பஷிர் ஆகியோரை அதிபர் பராக் ஓபாமா அவசரமாக அழைத்து நிவாரண உதவி வழங்குவது குறித்து ஆலோசனை நடத் தினார். மேலும் இறந்தவர்களின் குடும் பத்தினருக்கு இரங்கலும் தெரிவித்தார். (6)




# அணு ஆயுதமற்ற உலகை உருவாக்க உலக நாடுகள் முன்வரவேண்டும்

## ஐ.நா.பொதுச்செயலாளர் வலிறுத்தல்



அணு ஆயுத பரவல் மாநாடு நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமை அலுவல கத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இதில் 100 க்கும் மேலான நாடுகளின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

26 நாட்கள் நடக்கும் இந்த மாநாட்டை ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் தொடக்கி வைத்தார். அப்போது அவர் கூறி யதாவது,

அணு ஆயுதமற்ற உலகத்தை உருவாக் குவது என்ற இலட்சியத்தை நோக்கி நாம் முன்னேறவேண்டும் இது அடைய முடியாத இலட்சியம் அல்ல இதை அடையும் நாள் வெகு தொலை வில் இல்லை. இந்த இலட்சி யத்தை அடைய வேண்டும் என்று நாம் உறுதி பூண்டு செயல்பட வேண்டும் இது தான் இப்போதைய தேவை. அணு ஆயுதங் களை அழிப்பதற்கு அமெ ரிக்காவும் ரஷியாவும் சம்மதித்து உள்ளன. இப்போது உலகத்தில் 25 ஆயிரம் அணு ஆயுதங்கள் இருக்கின் றன இந்த நிலையில் அணு ஆயுதங்கள் தீவிரவாதிகள் கைகளில் சிக்கினால் அது உலக அமைதிக்கு ஆபத்தாகி விடும்.

அணு ஆயுத பரவலை எதிர்த்து உலகம் முன்னேறிக்கொண்டிருக்கும் நிலையில் ஈரான், வடகொரியா ஆகிய நாடுகள் உலக முயற்சியை சிக்கலாக்கி வருகின்றன. உலக நாடு களை அணு ஆயுதங்களை கைவிடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன் இவ்வாறு பான் கீ மூன் கூறினார். இம்மாநாட்டில் ஈரான் ஜனாதிபதி அகமத் நிஜாத் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (6)

# பச்சைப் பசேலான இடங்களில் பயிற்சி செய்வது ஆரோக்கியமானது

## பிரித்தானிய ஆய்வாளர்கள் தெரிவிப்பு



பூங்கா போன்ற பச்சைப் பசேலான சூழ் நிலையில் தினசரி 5 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வது மனநல ஆரோக்கியத்தை ஊக்கு விக்கும் என்பது பிரித்தானிய ஆய்வாளர்க ளால் மேற்கொள்ளப்பட்ட பிந்திய ஆய் வொன் றில் கண்டறியப்பட்டுள்ளது.

1250 பேரை ஆய்வுக்குட்படுத்திய போதே இந்த உண்மை கண்டறியப்பட்டுள்ளது.

பூங்கா போன்ற இயற்கையான சூழ் நிலையில் நடத்தல், சைக்கிளோட்டல் மீன் பிடித் தல், படகுச் சவாரி மேற்கொள்ளல், குதி ரையில் சவாரி செய்தல் மற்றும் தோட்டம் செய் தல் போன்ற செயற்பாடுகள் 5 நிமிட நேரத் தில் பெரும் அனுகூல விளைவை ஏற்படுத் துவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பச்சைப் பசேலென்ற சூழ் நிலையில் நீண்டகாலம் பயிற்சிக ளில் ஈடுபடுவது மன ஆரோக்கியம் தொடர்பில் கணிசமான அபிவிருத் தியை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படு கிறது. இந்த ஆய்வானது எஸெக்ஸ் பல் கலைக் கழகத்தைச் சேர்ந்த ஜுலஸ் பிரிட்டி தலைமையில் மேற்கொள்ளப் பட்டது.

பல்வேறு வயதுகளிலுள்ள ஆண் களையும் பெண்களையும் ஆய்வுக்குட் படுத்திய ஆராய்ச்சியாளர்கள், பச்சை பசேலென்ற சூழ்நிலையில் பணியாற்றுவது இளைஞர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட் வர்களி டையே பெரும் அனுகூல மாற்றத்தை ஏற்படுத் துவது கண்டறியப்பட்டுள்ளதாக கூறினார்.

தொழில் தருநர்கள் அழுத்தம் மிக்க சூழ் நிலையில் பணியாற்றும் தமது ஊழியர் களை மதிய உணவு வேளையில் அருகி லுள்ள பூங்காவிலோ அன்றி பச்சை பசே லென்ற இடத்திலோ உலாவி விட்டு வரப் பணிப்பதன் மூலம் அவர்களது மனநலத்தை அபிவிருத்திசெய்து அவர்களின் செயற்றி றனை ஊக்குவிக்க முடியும் எனத் தெரிவிக் கப்படுகிறது. (6)



இங்கிலாந்தில் நடைபெற உள்ள பொதுத்தேர்தலுக்கு இன்னும் 72 மணி நேரம் கூட இல்லாத நிலையில், நிதானமாக பிளாக்பூல் கடற்கரை பகுதியில் இனிய ஓட்டம் மேற்கொள்ளும் கன்சர்வேடிவ் கட்சி தலைவர் டேவிட் காமரூன்.


# இலங்கையில் அதிகார பங்களிப்புக்கு தொடர்ந்து வலியுறுத்துவோம்

## கருணாநிதி பேட்டி

(சென்னை)

இலங்கையில் அதிகார பங்களிப்புக்கு தொடர்ந்து வலியுறுத்துவோம் என்று முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்தார்.

டெல்லி சென்ற முதலமைச்சர் நேற்று முன்தினம் மாலை பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார். அப்போது நாடாளுமன்ற தி.மு.க குழுத்தலைவர் டி.ஆர். பாலு எம்.பி , மத்திய மந்திரி தயாநிதி மாறன், கனிமொழி எம்.பி, தலைமைச் செயலாளர் கே.எஸ்.ஸ்ரீபதி ஆகியோர் உடன் இருந்தனர்.



பிரதமரைச் சந்தித்த பிறகு முதலமைச்சர் தமிழ்நாடு இல்லத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு,

**கேள்வி:-** செம்மொழி மாநாட்டிற்கு பிரதமரோ, சோனியாகாந்தியோ வருகிறார்களா?

**பதில்:-** நான் அவர்களுக்கு அழைப்பு விடுத்தது, அவர்கள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. செம்மொழி மாநாட்டை தொடங்கி வைக்க நாங்கள் ஏற்கனவே ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர் வர ஒப்புக் கொண்டிருக்கிறார். அண்மையில் தான் பிரமாண்டமாக நடைபெற்ற தமிழக சட்ட மன்ற கட்டட திறப்பு விழாவிற்கு பிரதமர் மன்மோகன் சிங்கும், சோனியா காந்தியும் வந்திருந்தனர். அதனால் தான் அவர்களை மீண்டும் சிரமப்படுத்த விரும்பவில்லை.

**கேள்வி:-**பிரபாகரனின் தாயாருக்கு தமிழகத்தில் மருத்துவ சிகிச்சை அளிப்பது பற்றி தமிழக சட்டப் பேரவையில் துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை படித்துள்ளார். அப்போது சில நிபந்தனைகளோடு என்றுசொல்லியிருக்கிறார்.என்னநிபந்தனைகள்?

**பதில்:-** பெரிய நிபந்தனைகள் ஒன்றும் இல்லை. அவர்களின் பாதுகாப்புக் கருதி அரசின் மேற்பார்வையிலே அவர்கள் சிகிச்சை பெற வேண்டும் என்றும் மருத்துவச் சிகிச்சைக்கான ஏற்பாடுகளை அரசு செய்யும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதைத் தான் நீதிமன்றத்தில் ஒருவர் வழக்குத் தொடுத்து அரசின் சார்பில் அதற்குப் பதில் அளிக்கப்பட்டு தீர்ப்பு வந்ததின் தொடர்ச்சியாக அந்த அம்மையாரின் வேண்டுகோளை ஏற்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம். அவருடைய பாதுகாப்பு கருதி அரசின் அர வணைப்பில் அந்த அம்மையார் நாங்கள் குறிப்பிடுகின்ற மருத்துவ மனை யில் பாதுகாப்பாக இருக்க வேண்டும், அரச செலவில் அவர்கள் சிகிச்சை பெற வேண்டும் என்பது தான் நாங்கள் கூறியி ருக்கின்ற நிபந்தனை. இது ஒன்றும் கடுமை யானது அல்ல.

**கேள்வி:-**இலங்கையில் போர் முடிந்த பிறகு அதகார பங்களிப்பு செய்யப்படும் என்று உறுதியளித்தார்கள். ஆனால் போர் முடிந்த பிறகு அதற்கான ம்யற்சிகள் எடுக்கப்படவில்லையே? கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லையே?

**பதில்:-** அது பற்றி நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

**கேள்வி:-** இதற்காக மத்திய அரசிடம் பேச்சுவார்த்தை நடத்துவீர்களா?

**பதில்:-** நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம். தனியாக வலியுறுத்த முடியாது. மத்திய அரசு மூலமாகத்தான் வலியுறுத்துவோம். இவ்வாறு முதலமைச்சர் கருணாநிதி பதிலளித்தார். (2-6)

## பாக்.பயங்கரவாதிகள் இந்தியாவிற்குள் ஊடுருவல்

இந்தியாவிற்குள் மேற்கு கடல் பகுதி வழியாக 140 அல்குவைதா மற்றும் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் இந்தியாவிற்குள் நுழைந்திருக்கதாக உளவு துறையை மேற்கோள்காட்டி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மாநிலம் வாரியாக பிரிந்து சென்று சதிச் செயலில் ஈடுபடக்கூடும் என அஞ்சப்படுகிறது.

அசாம் மாநில பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி 140 பேர் இந்தியாவின் மேற்கு பகுதி கடல் வழியாக வந்திருக்கின்றனர் என்றும் மகாராஷ்டிரா குஜராத்தில், இறங்கி அங்கிருந்து பல குழுக்களாக அதாவது 30 பேர் ராஜாஸ்தானுக்கும் உத்தரப்பிரதேசத்திற்கு 14 பேரும் 15 முதல் 20 பேர் ஆந்திர மாநிலம் ஐதராபாத்திற்கும் மகாராஷ்டிராவுக்கு 12 பேரும் டில்லி-அரியானாவுக்கு 5 பேரும் இதில் இருந்த ஏனைய 40 பேர் தென் மாநிலங்களுக்கும் பிரிந்து சென்று இருக்கின்றனர் என்று கூறப்பட்டுள்ளது. இந்த பயங்கரவாதிகள் இலங்கை மீனவப்படகு மூலம் வந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த தகவல்கள் நோபாளத்தில் இருந்து பாகிஸ்தானுக்கு தொடர்பு கொண்ட பயங்கரவாதிகளின் உரையாடல் மூலம் தெரியவந்திருப்பதாகவும் தெரிகிறது. (6)



டெல்லியில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதி செய்துள்ளதாக அமெரிக்க எச்சரித்தது. அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதன் எதிர் ஒலியாக சென்னை விமான நிலையத்தில் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

# மலேசியாவில் உள்ள தமிழர்களை மீட்க மத்திய அரசு நடவடிக்கை

## அமைச்சர் வயலார் ரவி தெரிவிப்பு

(புதுடில்லி)

மலேசியா உள்ளிட்ட வெளிநாடுகளில் உள்ள தமிழர்களை மீட்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்று மத்திய அமைச்சர் வயலார் ரவி தெரிவித்துள்ளார்.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வயலார் ரவி,

மலேசியா உள்ளிட்ட வெளிநாடுகளில் ஏராளமான தமிழர்கள் போதுமான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் இல்லாமல் அந்நாட்டு அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை மீட்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிவித்தார். (6)




சேலம் குரும்பப்பட்டி வன உயிரியல் பூங்காவில் உள்ள வெள்ளை நிற மயில் ஒன்று வீசிய குளுமையான காற்றை அனுபவித்த படி தனது தோகையை விரித்து ஆடி பார்வையாளர்களை உற்சாகப்படுத்தியது.

# தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்கவேண்டும்

## பொன்.ராதாகிருஷ்ணன்

(சென்னை)



பிரபாகரனின் தாயாருக்கு இந்தியாவில் சிகிச்சை அளிக்கக்கோரி தமிழக அரசு விடுத்த கோரிக் கையை மத்திய அரசு ஏற்கவேண்டும் என தமிழக பா.ஜனதா தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் சிகிச்சை பெற இந்தியா வந்தபோது விமான நிலையத்தில் இருந்தபடியே அவரை திருப்பி அனுப்பிய மத்திய மாநில அரசுகளின் மனிதாபிமானமற்ற போக்கை கண்டித்து பாரதிய ஜனதா கட்சி சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அவர் இந்தியாவில் சிகிச்சை எடுத்துக் கொள்ள மத்திய மாநில அரசுகள் வழிகாண வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் பார்வதி அம்மாள் பாதுகாப்பு கருதி அரசின் அரவணைப்பில் அரசு செலவில் அரசு குறிப்பிடும் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு தேவை யான ஏற்பாடுகளை தமிழக அரசு செய்யும். இதற் கான அனுமதிகோரி மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

பாரதிய ஜனதாகட்சியின் கோரிக்கையை ஏற்று தமிழக அரசு நடவடிக்கை எடுத்திருப்பதை வரவேற்கிறேன். அதற்காக எனது பாராட்டுதல்களை தமிழக அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தொடர்பான தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு உடனடியாக ஏற்க வேண்டும். பார்வதி அம்மாள் இந்தியாவில் சிகிச்சை பெறுவதில் மேலும் கால தாமதம் ஏற்பட்டுவிட மத்திய அரசு காரணமாக இருந்து விடக் கூடாது.

அதேநேரத்தில் பார்வதி அம்மாள் தொடர்பான மருத்துவ ஏற்பாடுகளை தமிழக அரசே மேற்கொள்ளப்போவதாக அறிவித்திருப்பதால் அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை தரம் மிக்கதாக இருப்பதையும் பாதுகாப்பானதாக இருப்பதையும் தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்.

மிக முக்கிய பொறுப்பை அரசு ஏற்றிருக்கிறது. எனவே அரசு இந்த விடயத்தில் மிகுந்த கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயல்பட வேண்டும். இதில் எவ்வித சிறிய தவறுக்கும் இடம் அளித்து விடக்கூடாது.

அரசின் அலட்சியத்தாலோ வேறு காரணங்களாலோ ஒரு சிறிய தவறு நேரும் என்றாலும் அது தமிழக அரசுக்கு நீங்காத அவப்பெயரை ஏற்படுத்திவிடும் என்பதை தமிழக அரசு உணர வேண்டும் என்றார். (6)

அகமுடையானை எமனுக்குக் கொடுத்தாலும்–கொடுப்பேன் சக்களத்திக்குக் கொடுக்க மாட்டேன். –வங்காளம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு விரைவில் விடுதலை கிடைக்கும்!

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என பன நடந்து முடிந்த கையோடு அரசில் ரீதியான மாற்றங்கள், முன்னேற்றங்கள் என்பன தாராளமாக இடம்பெறவுள்ளன என்பதை நிறுத்திட்டமாக கூறமுடியும்.

அரசியல் மற்றும் சமூக, பொருளாதார முன்னேற்றங்களில் தமிழ் மக்களின் அனுபவிப்பு எவ்வாறு இருக்கும் என யாரேனும் கேட்பார்களாயின் தலையைக் குனிந்து மௌனம் சாதிப்பதே பதிலாக இருக்கும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெறுவதற்கு முன்பான பதவிக்காலத்தில் அரசியல் புகைமையை வளர்த்துக் கொள்வதற்கு இம்மியும் இடம் கொடுக்காமல் பிறகட்சிகளையும் தன்னுடன் இணைத்து சிநேக பூர்வ அரசியலை மேற்கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்த அரசியல் நுட்பத்தை தமிழ்த் தரப்பு இனங்காண்பதாக இல்லை. அவரின் யுத்த வெற்றிக்கு சிங்கள மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய உதிரிக் கட்சிகளை தன்னுடன் ஒன்று சேர்த்து ஒற்றுமைப் படுத்தியமை முக்கிய காரணமாகும்.

டி.யூ.குணசேகராவை அமைச்சராகவும், வாசுதேவநாணயக்காரவை தனது ஆலோசகராகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும் புள்ளிகளுக்கு பொறுப்பான அமைச்சுக்களையும் கொடுத்து தனது அரசியல் ஸ்திரத்தை உறுதி செய்து கொண்டார்.

இரண்டாவது தடவைக்கான ஜனாதிபதித் தேர்தலில் அவர் பெற்ற பெருவெற்றிக்குக் கூட தென்பகுதி அரசியலில் அவர் ஏற்படுத்திய நல்லுறவே மூலகாரணமாயிற்று.

இரண்டாவது தடவையாக ஜனாதிபதிப் பதவியை ஏற்ற அவர் ஜெனரல் சரத்பொன்சேகாவை சிறையில் அடைத்ததைத் தவிர வேறு அரசியல் கட்சிகளுடன் பகைத்துக் கொள்ளவில்லை.

பொதுத் தேர்தலின் பின்பு தனது ஆட்சிப் பலத்தைப் பூரணப் படுத்திக் கொண்டு தேர்தலில் வெற்றி பெற்ற சரத்பொன்சேகா நாடாளுமன்றம் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

சரத்பொன்சேகா நாடாளுமன்றம் சென்றால் யுத்தக் குற்றங்களை வெளிப்படுத்துவார் என அரசியல் அவதானிகள் நம்பியிருந்தாலும் அவை எதுவுமே நடக்கப் போவதில்லை.

மாறாக சரத்பொன்சேகாவுக்கு பொது மன்னிப்பு அல்லது சட்டரீதியான விடுதலை என்பதோடு அந்த நாடகம் முடிந்து விடும்.

தமிழர்கள் ஆகிய நாம் என்ன செய்ய முடியும்? முடிந்தால் இன்னும் பல கூறுகளாகப் பிரிந்து எங்கள் இனத்திற்கு நாங்களே ஊறு செய்வோமேயன்றி ஒற்றுமைப்படுவோமா என்ன?

# பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை

பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி பேராயர் யோசப் ஸ்பிரெறி ஆண்டகை இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார். இவரது யாழ். விஜயம் குறித்து யாழ். ஆயரின் செயலாளர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

கடந்த கால போரினால் பாதிக்கப்பட்டு மீண்டும் இடம் பெயர்ந்த மக்கள் மீள குடியமர்ந்து கொண்டிருக்கும் வேளையில் யாழ்ப்பாண நிலைமையும், கிறிஸ்தவ மக்களின் விசுவாச வாழ்வையும் தரிசிப்பதற்காக ஆண்டகை யோசப் ஸ்பிரெறி (Joseph Spiteri) இன்று வருகை தருகின்றார்.

அவர் இங்கு ஐந்து நாட்கள் தங்கி இருந்து பலதரப்பட்ட மக்களையும் சந்தித்து உரையாடி கிறிஸ்தவர்களின் சம நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார். இவ் வருகையின் போது தீவகம், பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய பகுதிகளையும் தரிசிப்பார்.

புதிதாக குருநகரில் Caritas-Hudcc நிறுவனத்தால் அமைக்கப்பட்ட மீன்பிடி வலை செய்யும் பாரிய தொழிற்சாலையையும் ஆசீர்வதித்து இதன் திறப்பு வைபவத்திலும் அவர் கலந்து கொள்வார். இதுவே அவர் வடபகுதிக்கு மேற்கொள்ளும் முதல் வருகை ஆகும்.



கிறிஸ்தவ மக்களின் பெரும் தலைவர் பரிசுத்த தந்தை 16 ஆம் பெனடிக்ற்றின் செய்தியையும், ஆசீரையும் தனது இவ் வருகையின் போது அனைவருக்கும் வழங்குவார். பேராயர் யோசவ் ஸ்பிரெறி ஆண்டகை மாலித்தாவை பிறப்பிடமாகக் கொண்டவர். பாப்பரசரின் பிரதிநிதியாக இலங்கையுடன் சேர்ந்து 7 நாடுகளில் இவர் பணி யாற்றியுள்ளார்.

ஆங்கிலம், இத்தாலி, பிறன்ச் (French), ஸ்பனிஸ் (Spanish), போர்த்துக்கல் ஆகிய மொழியிலும் நன்கு தேர்ச்சி பெற்றவராவர்.

பேராயரின் வருகை யாழ். மறைமாவட்டத்துக்கு அருள் புரிவதாக. எம்மை தேடி வரும் பாப்பாண்டவரின் பிரதிநிதியை நாமும் மகிழ்வுடன் வரவேற்கும் முகமாக வருகின்ற 09.05.2010 ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பேராயர் வளாகத்தில் பொது வரவேற்பும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# கல்விச்சுற்றுலா

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான சுற்றுலாவில் யாழ். வலயப் பிரிவிலுள்ள பாடசாலை அதிபர்களில் ஒரு தொகுதியினர் இன்று காலை இலங்கையின் பிள்ளை நேயப் பாடசாலைகளுக்கு செல்லவுள்ளனர்.

யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளரின் ஏற்பாட்டில் இலங்கையின் வரலாற்று முக்கியத்துவ இடங்கபை் பார்வையிட பாடசாலையில் பொருளில், புவியியல் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் நேற்றுக் காலை பயணமாகியி ருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் ஏனைய கல்வி வலயத் தினரும் இக்களப் பயணத்திற்கு தயாராகி வருகின்றனர். (6-30)

# அதிபர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கலட்டி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த10 ஆண்டுகளாக அதிபராக கடமையாற்றி வந்த என். விஜய்குமார் நேற்று முன்தினம் முதல் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பிரதி அதிபராக வடமாகாண கல்வி அமைச்சரின் செயலாளர் இ. இளங்கோவனால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (6-30)

# பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் சேவை செய்வதே எனது நோக்கம்

## யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

சமூகத்தினதும் பொது மக்களினதும் தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் கூட்டுறவுச் சேவையினை முன்னெடுத்துச் செல்வதே தனது பிரதான நோக்கமாக காணப்படுகின்றது என யாழ். மா. கூ.அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

2008 இல் வவுனியா மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக பதவி வகித்துவிட்டு தற்போது யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக நேற்று முன்தினம் கடமையை பொறுப்பேற்ற ஆணையாளருடனான நேரடி சந்திப்பின் போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல கூட்டுறவுகளும் பொதுமக்களின் தேவைகளை திருப்திகரமாக கருத்திற் கொண்டு அதனை திருப்திகரமாக பூர்த்தி செய்யும் நோக்கில் செயற்படுவதே எனது பிரதான நோக்கம்.

இவ்வாறு செயற்படும் போதுதான் பொதுமக்கள்,. சமூகம் என்பனவற்றிற்கு கூட்டுறவுத்துறை மீது நம்பிக்கை வளரும்.

கூட்டுறவானது சேவைகளை மேற்கொள்ளும்போது தரமான உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதனால் தனியாருக்கு ஈடாக இலாபத்தினை பெறவுள்ளதுடன் மக்களுக்கும் திருப்தியானதாக அமையும்.

ஒவ்வொரு பிரதேசத்திலுள்ள கூட்டுறவு சேவைகள் பற்றிய குறைபாடுகளை மக்கள் கடிதம் மூலம் தனது அலுவலகத்திற்கு நேரடியாகக் கொண்டு வந்து தந்தால் இது குறித்து பரிசீலனை செய்ய தாம் தயாராக இருப்பதாகவும் அவ்வாறில்லாவிட்டால் பத்திரிகையில் சுட்டிகாட்டியிருந்தாலும் தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



கூட்டுறவு பணத்தை விரயமாக்காது மக்களின் தேவை உணர்ந்து செயல்பட வேண்டும். இதற்காக ஏனைய மாவட்டங்களில் ஆணையாள ராக இருந்த அனுபவத்தின் படி இங்கும் எனது சேவையினை எதிர்காலத்தில் தொடர்ந்து செய்ய தன்னாலான அனைத்து முயற்சிகளை மேற்கொண்டு அயராது உழைப்பேன் என்றார்.

கடந்த ஏழு வருடங்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக பணிபுரிந்த பொ.சிவலிங்கம் திருகோணமலை மாவட்ட கூட்டுற உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதனையடுத்து தற்போது கடமையை பொறுப்பேற்ற புதிய ஆணையாளர் 2006இல் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலராகவும் 2007இல் வடமாகாண தலைமை அலுவலக கூட்டுறவு ஆணையாளராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். (6-30)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்


## பல்சுவை




அதன் பிறகு ஆண்களும் பெண்களும் தங்கள் விதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளட்டும். வாழ்க்கையின் மிக முக்கியமான பிரச்சினை குறித்து நம் முன்னோர்களும் மற்ற நாட்டவர்களும் கொண்டிருந்த கருத்துக்களை அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். குறிப்பாக இப்போது மற்ற நாட்டவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் பார்த்து அதன் பிறகு அவர்கள் ஒரு முடிபுக்கு வரட்டும்.

இரசாயனப் பொருள்களை ஒன்று சேர்ந்து வைப்பதுதான் எமது வேலையர்கும். இயற்கையின் நியதியையொட்டி அவை தாமாகவே படிகங்களாக மாறுதலடைந்துவிடும்.

கடுமையாக உழை, உறுதியாக இரு. பாமர மக்களின் மதத்துக்கு ஊறு விளைவிக்காமல் அவர்களை முன்னேற்றமடையச் செய்வதே உன் இலட்சியமாக இருக்கட்டும்.





வல்வெட்டித்துறை மக்கள் வங்கியினால் வல்வெட்டித்துறை ஆதிசக்தி கடற்றொழிலாளர் சங்கத்தினூடாக 50 கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் அபிவிருத்திக் கடன் வழங்கப்பட்ட நிகழ்வில் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஸ்ணானந்தன், கடன்பகுதி உத்தியோத்தகர் வி.ஜெயமோகன் ஆகியோர் வரவேற்கப்படுவதையும் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் ஆதிசக்தி கடற்றொழிலாளர் சங்க தலைவர் எஸ்.சேதுலிங்கம் தொழிலாளர் ஒருவருக்கு கடன் தொகையை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை செயற்திறன் உள்ளதாக முன்னெடுக்க விசேட செயலணி

(கொழும்பு)

டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையை விரிவான அடிப்படையில் செயற்திறன் மிக்கதாக முன்னெடுக்கவென விசேட ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப் படும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளா்.

சுகாதார அமைச்சு ,உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, கல்வி அமைச்சு, சுற்றுலா அமைச்சு உட்பட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்கி இந்த செயலணி அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

டெங்கு நோய் காரணமாக கடந்த வருடம் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்ட துடன் 360 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் உட்பட 65 மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளில் டெங்கு நுளம்புகள் தீவிரவாமகப் பரவும் நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றன. சுகாதார அமைச்சு டெங்கு நுளம்புகளைக் கட்டுபடுத்தவென ஏற்கனவே பல நடவடிக் கைகளை மேற்கொண்டிருக்கின்றது. இருந் தும் டெங்கு நோய் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்திருப்பதாகத் தெரியவில்லை.

இதனைக் கருத்திற்கொண்டு டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையை செயற் திறன் மிக்கதாக விரிவான அடிப்படையில் முன்னெடுக்கக்கூடிய வகையில் விசேட ஜனாதி பதி செயலணியொன்றை அமைப்பதற்கு உத் தேசித்திருப்பதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

## நாடாளுமன்றத்தை படம் பிடித்தவர் அதிகாரிகளினால் வெளியேற்றம்

(கொழும்பு)

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியினை படம் பிடித்த இனந்தெரியாத நபரொருவர் அங்கிருந்து அதிகாரிகளினால் வெளியேற றப் பட்டுள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் கள் சபாநாயகரிடம் முறைப்பாடு செய்துள்ள னர்.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட இனந்தெரி யாத நபர் ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவு உறுப்பினர் என்று தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த சம்பவத்தை அரசாங் கம் எந்த வகையில் மறுக்கும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர். (6-4)

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலை மாணவர் மீது பொலிஸார் தடியடி

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் குழு வொன்றின் மீது பொலிஸார் தடியடிப் பிர யோகம் மேற்கொண்டுள்ளார்.

இதன் காரணமாக நான்கு மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பேராதனை பல்கலைக்கழகம், றுகுணு பல்கலைக்கழகம் மற்றும் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (6-4)

## போலி சாரதி அனுமதி பத்திரங்களை தயாரித்து வழங்கிய நபர் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு பிரதேசத்தை சேர்ந்தவர்க ளுக்கு போலி சாரதி அனுமதிப்பத்திரங் களை தயாரித்து வழங்கி வந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வாகரை பால்சேனை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை நகரில் போலி சாரதி அனு மதிப்பத்திரத்துடன் கைது செய்யப்பட்ட ஒரு வர் வழங்கிய தகவலின் அடிப்படையில் உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பிரதேச சபை உறுப் பினர் ஒரு சாரதி அனுமதிப்பத்திரத்தை தயாரித்து வழங்க 15 ஆயிரம் ரூபாவை அறவிட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கடந்த காலத்தில் வாகரை பிரதேசத்தில் போலி அடையாள அட்டைகளை வைத்தி ருந்த சிலர் கைது செய்யப்பட்டதாகவும் இந்த சம்பவத்துடனும் சந்தேக நபருக்கு தொ டர்புள்ளதா என்பது குறித்து விசாரணை களை நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளார். (6)

## காசநோய் தொடர்பான கருத்தரங்கு


(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் நடத்தப்படும் காசநோய் தொடர்பான கருத்தரங்கு நாளை வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துசிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக NPTCCD நிறுவன இயக்குநர் டாக்டர் சுனில் டி. அல்விஸ், கௌரவிருந்தினராக வடக்கு மாகாண பணிப்பாளர் டாக்டர் ஏ.இ.ஞான சோதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் சுழிபுரம் விக்ரோ றியா கல்லூரி மாணவர்களின் பரதநாட்டிய நிகழ்வு மற்றும் கலாசார நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

அத்துடன் உலக காசநோய் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி யீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ் வும் இடம்பெறவுள்ளது. (6-4)




சாவகச்சேரி நுணாவில் மத்தி சர்வசாதன சனசமூக நிலையத்தின் பாரதி முன்பள்ளியின் விளையாட்டு விழாவில் பிரமத விருந்தினராக கலந்து கொண்ட நகரசபை வேலைப்பகுதி அத்தியட்சகர் வி.செல்வரத்தினம் மங்கல விளக்கேற்றுவதனையும், அருகில் அதிபர் சிவசோதி, நிலைய தலைவரும் இறப்பு பிறப்பு பதிவாளருமாகிய மோகனராஜலிங்கம் ஆகியோர் நிற்பதனையும் போரூட் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பாண்ட் வர்த்தியங்களுடன் முன்பள்ளி மாண வர்களையும் படங்களில் காணலாம்.

# டக்-வேத் லூயிஸ் விதிமுறையில் நியூசிலாந்து 7 ஓட்டங்களால் வெற்றி

## சிம்பாவே தொடரிலிருந்து விடைபெற்றது



(கஜானா)

மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் பாதிக்கப்பட்ட நியூசிலாந்து அணி டக்-வேத் லூயிஸ் முறையில் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சுப்பர்-8 சுற்றுக்கு முதலாவது அணியாக முன்னேறியது.

மேற்கிந்தியத்தீவுகளில் நடக்கும் ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 உலகக்கிண்ண தொடரில் நேற்று கஜானாவில் நடைபெற்ற லீக் சுற்றின் 9ஆவது போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த நியூசிலாந்து, சிம்பாவே அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணிக்கு தைபு-மஷாகட்ஷா ஜோடி சுமாரான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 4.4 ஓவர்களில் 36 ஓட்டங்களை எடுத்த போது தைபு 14 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) [illegible] ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய வீரர்கள் சோபிக்காத நிலையில் சிம்பாவே அணி 15.1 ஓவர்களில் 84 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் மஷாகட்ஷா 20 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 20 ஓட்டங்களையும் லாம்ப் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நாதன் மக்குலம், ஸ்கொட் ஸ்ரைரிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் டானியல் விக்டோரி 2 விக்கெட்டுக்களையும் சௌத்தி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 85 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகு வான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 8.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டையிழந்து 36 ஓட்டங்களை எடுத்தபோது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் மழை நீடித்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டதுடன் டக்-வேத் லூயிஸ் விதிமுறைப்படி நியூசிலாந்து அணிக்கு வெற்றியிலக்காக 8.1 ஓவர்களில் 29 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

எனினும் நியூசிலாந்து அணி 8.1 ஓவர்களில் 36 ஓட்டங்களை எடுத்த நிலையில் டக்-வேத் லூயிஸ் முறையில் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் பிரண்டன் மக்குலம் 26 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 22 ஓட்டங்களையும் குப்தில் 06 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் உற்சயா ஒருவிக்கெட்டை வீழ்த்தினார்.

இவ் வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணி லீக்சுற்றில் 4 புள்ளிகளை பதிவு செய்து பி பிரிவில் இருந்து முதலாவது அணியாக சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறியது.

இதேவேளை லீக் சுற்றின் இரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்த சிம்பாவே அணி தொடரிலிருந்து விடைபெற்றது.

# மழையால் ஆட்டம் பாதிப்பு; மேற்கிந்தியத்தீவுகள் திரில் வெற்றி



(கஜானா)

மழைகாரணமாக ஆட்டம் பாதிக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி டக்-வேத் லூயிஸ் முறையில் 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகளில் நடக்கும் ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 உலகக்கிண்ண தொடரில் நேற்று முன்தினம் கஜானாவில் நடைபெற்ற லீக் சுற்றின் 8ஆவது போட்டியில் டி பிரிவைச் சேர்ந்த மேற்கிந்தியத்தீவுகள், இங்கிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணித்தலைவர் கிறிஸ் ஹயில் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு லூம்ப்-கீஸ் வேற்றர் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.

எனினும் லூம்ப் 18 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 28 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய பீற்றர்சன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் கீஸ் வேற்றர் 14 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் உட்பட) 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் கொலின்வூட் 06 ஓட்டங்களுடன் வெளியேற மறுமுனையில் பீற்றர்சன் 20 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 24 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 10 ஓவர்களில் 81 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும்5ஆவதுவிக்கெட்டுக்காகஇணைந்த மோர்கன்-ரைட் ஜோடி அதிரடி இணைப்பாட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தனர்.

இதில் மோர்கன் 32 பந்துகளில் அரைச் சதத்தைக்கடக்க இங்கிலாந்து அணி 17.1 ஓவர்களில் 150 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடி 5ஆவது விக்கெட்டுக்காக 9.2 ஓவர்களில் 95 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது மோர்க்கன் 35 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 55 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 191 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரைட் 27 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 4 சிக்ஸர்கள் உட்பட) 45 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் சமி 2 விக்கெட்டுக்களையும் ஹயில் மில்லர், பிரவோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 192 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 2.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 30 ஓட்டங்களை எடுத்தபோது மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

சுமார் ஒரு மணி 30 நிமிடங்கள் தடைபட்ட ஆட்டம் மீண்டும் ஆரம்பமாகியபோது மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு டக்-வேத்லூயிஸ் முறையில் 6 ஓவர்களில் 60 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந் நிலையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 3.3 ஓவர்களில் 41 ஓட்டங்க்ளை எடுத்தபோது அணித்தலைவர் ஹயில் 12 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 25 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய பொல்லாட் பூச்சியத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினார். கடைசி ஓவரில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வெற்றிக்கு 8 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

சந்தர் போல்-பிளேச்சர் களத்தில் நின்றனர். முதலாவது பந்தில் சந்தர்போல் ஒரு ஓட்டத்தை எடுக்க இரண்டாவது பந்தில் பிளேச்சர் 2 ஓட்டங்களைப்பெற்றார்.

மூன்றாவது பந்தில் ஓட்டம் எதுவும் எடுக்கப்படவில்லை. நான்காவது பந்தில் பிளேச்சர் பவுண்டரி அடிக்க மேற்கிந்தித்தீவுகளில் நெருக்கடி தளர்ந்தது.

5ஆவது பந்தில் ஒரு ஓட்டம் எடுக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 5.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களைமாத்திரமிழந்து 60 ஓட்டங்களை எடுத்து டக்-வேத் லூயிஸ் முறையில் 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் சந்தர்போல் 13 பந்துகளில் (ஒரு சிக்ஸர் உட்பட) 15 ஓட்டங்களையும் பிளேச்சர் 10 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 12 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சுவான் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப் போட்டியில் ஆட்டநாயக னாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சமி தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணி லீக் சுற்றில் 4 புள்ளிகளைப்பதிவு செய்து சுப்பர்-8 சுற்றுக்கு டி பிரிவிலிருந்து முதலாவது அணியாக முன்னேறியது.



உலக புத்தக தின விழாவை முன்னிட்டு கடந்த வாரம் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற புத்தக கண்காட்சியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தலைமைக் காரியாலய சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.கந்தசாமி மற்றும் ஈ.பி.டி.பியின் தீவக வலயப் பொறுப்பாளர் போல் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் வேலணை பிரதேச சபைச் செயலாளர் கெ.தவராசா உரையாற்றுவதையும் கண்காட்சியை பார்வையிடுவோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்



# சில அரச திணைக்களங்களுக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கல்வி மற்றும் பொலிஸ் திணைக்களங்களுக்கு எதிராக இவ் வருடம் முதல் காலாண்டுப் பகுதியில் பல முறைப்பாடுகள் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணைக்குழுவின் இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இதில் மாணவர் அனுமதி, பாடசாலை விடுகைப் பத்திரம் பெறல், ஆசிரியர்களின் நிர்வாகச் சிக்கல், பதவியுயர்வு, மாணவர்களை ஆசிரியர்கள் தாக்குதல் போன்ற குற்றச்சாட்டுக்கள் கல்வித் திணைக்களங்களுக்கு எதிராகவும் பொலிஸ் திணைக்களங்களில் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை எனப் பொலிஸாருக்கு எதிராகவும் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாத காலப் பகுதியில் குறித்த 2 திணைக்களங்களுக்கு எதிராக 20 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-30)

## உறுப்பினர்...

ஜெயசேகர தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஆளும் கட்சியின் பிரதான கொறடா அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, எவரும் அனுமதியின்றி நாடாளுமன்றத்திற்குள் பிரவேசிக்கவில்லை எனக் கூறினார்.

அதேவேளை கையடக்கத் தொலைபேசியைக் கூட கொண்டு செல்ல அனுமதி வழங்கப்படாத சபைக்குள் எந்தக் காரணத்திற்காக சபாநாயகர் புகைப்படக் கருவியை எடுத்துவர அனுமதித்தார் என ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா கேள்வி எழுப்பினார். (ச-5)

## 29 கிராம சேவையாளர் பிரிவு...

மேற்கு, (ஜே/223)-வித்தகபுரம், (ஜே/224)-பன்னாலை, (ஜே/225)- கொல்லங்கலட்டி, (ஜே/229)- துர்க்காபுரம், (ஜே/230)-தந்தை செல்வாபுரம்,

(ஜே/231)-மாவிட்டபுரம், (ஜே/232)-மாவிட்டபுரம் தெற்கு, (ஜே/239)-கட்டுவன் மேற்கு. *(இப்பிரதேசங்களுக்கான கண்ணிவெடி அகற்றுவதற்கான தொழில்நுட்ப கணிப்பீடு முடிபடைந்துள்ளது).*

(ஜே/226)-நகுலேஸ்வரம், (ஜே/228)-தெல்லிப்பழை, (ஜே/236)- பளைவீமன்காமம் வடக்கு பகுதி, (ஜே/237)- பளைவீமன்காமம் தெற்குப் பகுதி,(ஜே/238)- கட்டுவன் பகுதி, (ஜே/241)- வறுத்தலைவிளான் பகுதி, *(இப் பிரதேசங்களுக்கான கண்ணிவெடி அகற்றுவதற்கான தொழில்நுட்பக் கணிப்பீடு நடைபெற்று வருகின்றது).*

**வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு**

(ஜே/426)- செம்பியன்பற்று வடக்கு, (ஜே/427)- செம்பியன்பற்று தெற்கு, (ஜே/428)-மருதங்கேணி, (ஜே/429)- வத்திராயன், (ஜே/430)- உடுத்துறை, (ஜே/431)- ஆழியவளை, (ஜே/432)- வெற்றிலைக்கேணி, (ஜே/433)-முள்ளியான், (ஜே/434)- போக்கறுப்பு. *(நாகர் கோவில், கோவில் மற்றும் சுண்டிக்குளம் பகுதிகளில் கண்ணிவெடி உடனடியாக அகற்ற முடியாதுள்ளதனால் இவற்றுக்கான பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படவுள்ளது. ஏனைய பிரதேசங்களில் மீள்குடியேற்றத்துக்கான முன்னாய்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன).*

**நல்லூர் பிரதேச செயலர் பிரிவு**

(ஜே/89)-அரியாலை கிழக்கு, (ஜே/89)-அரியாலை தென்கிழக்கு. *(இப் பகுதிகளின் குறிப்பிட்ட சில இடங்களில் உடனடியாக கண்ணிவெடி அகற்ற முடியாதுள்ளதனால் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு ஏனைய பிரதேசங்களில் மீள்குடியேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன).*

**தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவு**

(ஜே/333)- எழுதுமட்டுவாள் தெற்கு, (ஜே/336)- மிருசுவில் தெற்கு. *(இப் பிரதேசங்களுக்கான கண்ணிவெடி அகற்றுவதற்கான தொழில்நுட்பக் கணிப்பீடு நடைபெறுகின்றது).*

*மேற்படி கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த பகுதிகளில் மீள்குடியேற ஏற்கனவே விண்ணப்பிக்காத குடும்பங்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம்).*

கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்களில் மீள்குடியேறவுள்ள குடும்பங்களுக்கு மீள்குடியேற்றத்திற்கு முன்பாக மிதிவெடி விழிப்புணர்வு அபாயக் கல்வி வழங்கப்படும்.

மீள்குடியேற்றத்திற்கான திகதி உரிய பிரதேச செயலர்கள் ஊடாக அறிவிக்கப்படும் எனவும் அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## நாங்கள் நாங்களாகவே நின்று...

அங்கு மேலும் உரையாற்றுகையில்,

2-வது உலக யுத்தம் முடிபடையும் தருவாயில் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்டு சரணடையும் நிலையிலிருந்த போதிலும் அணு குண்டு வீச்சுக்கு உட்படுத்தப்பட்டு இரு பெரும் நகரங்களையும் 2 இலட்சம் மக்களையுமிழந்து இன்றுவரை கதிர்வீச்சுத் தாக்கத்திலிருந்து முழுமையாக விடுபடாத போதிலும் மீண்டும் ஒரு பொருளாதார வல்லரசாக எழுச்சி பெற்று நிற்கும் யப்பானிய தேசத்தின் அன்பளிப்பான இக் கட்டடத் தொகுதியில் நின்று என் கன்னியுரையை எதிர்காலம் பற்றிய உயர்வான நம்பிக்கையுடன் ஆரம்பிப்பதில் பெருமையடைகின்றேன்.

தோற்கடிக்கப்பட்டவர்கள் எல்லோரும் தோற்றுப் போனவர்கள் அல்ல. அழிக்கப்பட்டவர்கள் எல்லோரும் அழிந்து போனவர்களும் அல்ல என்பதற்கு உலக வரலாற்றில் ஏராளமான உதாரணங்கள் உண்டு.

துருக்கிய பேரரசாலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளாலும் காலத்திற்குக் காலம் அழிக்கப்பட்டு வெறும் கற்குவியலாக்கப்பட்ட ரோமானிய தேசம், அந்தக் கற்களையே தங்கள் மூல வளமாக்கி சீமெந்து உற்பத்தியில் பெரும் சாதனையீட்டி இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது.

அந்தக் கற்களில் எழுதப்பட்ட சோக காவியங்கள் இன்று வசந்த கீதங்களாக மாற்றப்பட்டு விட்டன. ஒரு தேசமோ ஒரு இனமோ இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டுப் பேரழிவுகளுக்கு முகம் கொடுக்கும்போது, மீள் எழுவதற்கு இன்னுமொரு பாதையுண்டு என்பதை யப்பானியர்களும் ரோமானியர்களும் இன்று முழு உலகத்திற்கும் நிரூபித்து விட்டனர்.

நாம் பயங்கரவாதிகளாகப் பட்டம் சூட்டப்பட்டோம். உலக வல்லரசுகளும் பிராந்திய வல்லரசும் எமது இராணுவ பலத்தையும் எமது சந்ததியையும் அழிப்பதற்கு உரிய நியாயப்பாட்டை எம்மைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக் கொண்டதன் மூலம் ஏற்படுத்திக் கொண்டன.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு பெரும் யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டது. பல்லாயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இன்னும் பல ஆயிரமவர் ஊனமாக்கப்பட்டனர். காணாமல் போனோரின் தொகை இன்னும் கணக்கிடப்படவில்லை.

பல கோடி பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன, சூறையாடப்பட்டன. எல்லாவற்றையுமிழந்து அகதிகளாக வெறும் கைகளுடன் முட்கம்பி வேலிகளுக்குள் முடக்கப்பட்டோர் தொகை இலட்சங்களால் உயர்ந்தது.

இப் பேரழிவுகளின் பின்னால் இலங்கை அரசுக்கு உலக வல்லரசுகளும் பிராந்திய வல்லரசுகளும் மறைமுகமாகவும் நேரடியாகவும் பெரும் பங்களிப்பை வழங்கின.

எங்கள் அழிவுகளின் பின்னால் வல்லரசுகளின் பங்கை எவரும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. இன்னும் சொல்லப் போனால் நாங்கள் தோற்கடிக்கப்படும் வரை இலங்கை அரசுக்கு வல்லரசுகள் துணை நின்றன.

இன்று-இப்போரில் எம் மீது போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதாகவும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகவும் குற்றஞ்சுமத்திச் சிங்கள தேசத்தின் கழுத்தை நெரிக்க வல்லரசுகள் தங்கள் கரங்களை நீட்டுகின்றன.

அதாவது எங்களை அழிக்க உங்களுக்குத் தோள் கொடுத்தவர்கள், இன்று உங்களை அடிமைப்படுத்த எங்களைப் பாவிக்கின்றார்கள்.

மதிப்பிற்குரிய எங்கள் சகோதரர்களே! எங்களுக்கு எதிராக உங்களையும் உங்களுக்கு எதிராக எங்களையும் பாவித்து எங்கள் எல்லோரையும் அடிமை கொள்ள முயலும் இவர்களின் வலையில் நாம் தொடர்ந்தும் விழத்தான் வேண்டுமா?

நாம் ஒரு தேசத்தின், இரு தேசிய இனங்களாக ஐக்கியப்பட்டு நின்று நாங்கள் எங்களையும் எங்கள் தேசத்தையும் தற்காத்துக் கொள்ள வேண்டாமா? இரு இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வும் நல்லிணக்கமும் வேறு எப்போதையும் விட இப்போது மிக அவசியம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது இராணுவ வலிமை அழிக்கப்பட்ட பின்னர் எமது உரிமைகளுக்கான போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்பு எங்கள் பலவீனமான நிலைமையின் மீது மேலாதிக்கம் செலுத்துவதன் மூலம் ஒரு ஐக்கியத்தை உருவாக்கி விட முடியும் என்ற ஒரு தவறான பார்வை உங்கள் மீது திணிக்கப்பட்டிருக்கலாம்.

இத்தகைய ஒரு பார்வையும் அதன் வேர்களிலிருந்து எழுந்த சிந்தனைப் போக்குமே எமது 60 வருட காலப் போராட்டத்திற்கும் 30 வருட ஆயுதப் போராட்டத்திற்கும் அடிப்படை என்ற உண்மையை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய காலம் இது.

மீண்டும் குருதி சிந்தும் நாள்களை உருவாக்கும் காரணிகளைத் தயவு செய்து உங்கள் எண்ணங்களிலிருந்து தூக்கி தூர வீசி விடுங்கள். அடக்குபவர்களுக்கும் அடக்கப்படுபவர்களுக்கும் இடையே ஐக்கியம் நிலவியதாக வரலாறு இல்லை. நிம்மதி நிலைத்ததாக உதாரணங்கள் இல்லை.

நாங்கள் நாங்களாகவும் நீங்கள் நீங்களாகவும் கரம் கோர்த்து நின்று எங்கள் தேசத்தைக் கட்டி எழுப்புவோம். எங்கள் கழுத்தை உங்கள் கரங்கள் நெரிக்க வேண்டாம். உங்கள் கரங்களை எங்கள் பற்கள் காயப்படுத்த வேண்டாம்.

உங்களுக்கென ஒரு பாரம்பரிய வாழ் நிலம், மொழி, பொருளாதாரம், தனித்துவமான கலாசாரம் உண்டு. எமக்கும் இவை அனைத்தும் உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள் என அவர் தனது உரையில் மேலும் கூறினார். (எ)

## அநாமதேயக் கடிதத்தின்...

தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

அநாமதேயக் கடிதத்தின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுப்பது சட்டத்திற்கு விரோதமான செயல். அந்த வகையில் அவர்களது குடும்பத்தினர் அடிப்படையுரிமை மனித உரிமை மீறல் குறித்து வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

அநாமதேயக் கடிதத்தை வைத்துக் கொண்டு இப்படி நடவடிக்கை எடுப்பதென்பது எங்கும் நடப்பதில்லை. ஆனால் இங்கு பல விநோதங்களில் இதுவும் ஒரு விநோதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சாள்ஸ் என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர். அவரை அழைத்து நீங்கள் விசாரித்து உண்மை நிலையை தெரிந்து கொள்ளுங்கள் என்றுதான் பொலிஸாரிடம் சொல்லியிருக்கின்றேன்.

இதுவரை அப்படி பொலிஸாரும் என்னிடம் கதைக்கவும் இல்லை. அப்படி நடந்ததாகவும் தெரியவில்லை என்றார்.

இதேவேளை சாவகச்சேரி நீதிமன்ற பதிவாளரினால் 30.04.2010 அன்று விலாசமிடப்பட்ட கடிதம் தனக்கு நேற்றே கிடைத்ததாகவும் அமைச்சர் பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளார். (ச-3)

## அவசர...

பட்டுள்ளது.

இந் நிலையில் பொதுக் கூட்டம் நடத்துவதற்காக விதிக்கப்பட்டிருந்த அனுமதிச் சட்ட ஒழுங்கு விதிகள் தளர்த்தப்பட்டுள்ளதாகவும் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

அவசர காலச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளைத் தளர்த்தவதன் மூலம் ஏதும் பிரச்சினைகள் ஏற்படின் அதன்போது பொலிஸார் உடனடிச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வீட்டிலுள்ள குடும்பத் தலைவரின் தலைமையிலான விபரப் பட்டியல் பொலிஸாருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற ஒழுங்கு விதியும் அரசாங்கத்தினால் நீக்கப் பட்டுள்ளது.

அவசர காலச் சட்டத்தின் கீழ் கட்டடங்களுக்குள் பிரவேசித்தல் மற்றும் கைப்பற்றுதல் போன்ற உரிமை முன்னர் பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது இனிவரும் காலத்தில் தளர்த்தப்படும் எனவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

அவசர காலச் சட்டத்தைத் தளர்த்துவதன் மூலம் எந்தவொரு புதிய சட்டத்தையும் கொண்டு வர அரசாங்கம் முயற்சிக்காது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-5)

## நாடாளு...

சிறப்புரிமையை மீறும் செயலாகும் எனவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், இராணுவ விசாரணைக்குச் செல்லாமல் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (ச-5)

## இன்றிலிருந்து...

கொள்கின்றேன் என அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றம் செய்யப்பட்ட விலை விபரம் வருமாறு,

| பொருள் | நிறை | முன்னைய விலை | தற்போதைய விலை |
|---|---|---|---|
| பாண் | 450g | ரூ.37/= | ரூ.38/= |
| கிறீம் பணிஸ் (ஒரு சோடி) | 150g | ரூ.22/= | ரூ.23/= |
| ரி பணிஸ் (ஒரு சோடி) | 130g | ரூ.20/= | ரூ.20/= |
| கொம்பு பணிஸ் | 70g | ரூ.12/= | ரூ.12/= |
| அடைக்கேக் | | ரூ.17/= | ரூ.18/= |

## புலிகளின் புதிய பிரிவு உள்ள...

அவர் மேலும் கூறியதாவது, விடுதலைப் புலிகள் அமைப்பில் புதிய இராணுவப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தனிநாட்டை அமைக்கும் நோக்கில் இந்த இராணுவப் பிரிவை அவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

புலிகளின் இந்த நடவடிக்கை காரணமாக அவசர காலச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும். விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் முதலாவது நினைவுதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு விடுதலைப்புலிகள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அவசர காலச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டாலும் பயங்கரவாதத் தடைச் சட்டங்கள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரீஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது அமுலில் உள்ள அவசர காலச் சட்டத்தைப் போன்று புதிய பயங்கரவாதத் தடைச் சட்டங்களைக் காலத்திற்குக் காலம் நீடிக்க வேண்டிய அவசியமில்லை. அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய அரசியல் சாசனத்தில் இந்த விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்தப்படும்.

வெளிநாட்டு சக்திகளின் அழுத்தம் காரணமாக அவசர காலச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவில்லை. யுத்தம் நடைபெற்ற காலத்திலேயே அரசாங்கம் வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியவில்லை எனவும் அவ்வாறான ஓர் பின்னணியில் தற்போது வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணிய வேண்டிய அவசியம் இல்லையென வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-3,5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.